
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00.


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | வைகாசி 01 புதன்கிழமை | (15.05.2013) | பக்கங்கள் 20 | ஓசை – 227












# மனித உரிமைகள் நிலைவரம் அறிய நிபுணர் குழு கொழும்புக்கு

## பச்சைக்கொடி காட்டியது அரசு



(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் பாது காக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் உயர்தரத்தில் மதித்துப் பேணப்படுவதை வலியுறுத்தவும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த நிபுணர்குழு ஒன்று இலங்கை வரவுள்ளது.

அனேகமாக கொழும்பில் நடைபெற விருக்கும் பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னதாக இந்த நிபுணர்கள் குழு கொழும்புக்கு வருகைதரவுள்ளது.

மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான செயல்நுட்ப உதவிகளை (Technical support) வழங்க காமன்வெல்த செயலகம் ஏற்கனவே முன்வந்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றி தேசிய மட்டத்திலான விசாரணை நடத்துவது பற்றி காமன்வெல்த் செயலகத்தின் ஊடாக பல சர்வதேச நாடுகளின் நிபுணர்கள் இலங்கை வரவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக குழுவின் ஆணையாளர் டாக்டர் பிரதீபா மஹநாம பி.பி.சி. தமிழோசைக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# அரசை எதிர்க்கும் சக்தி எதிர்க்கட்சிகளிடம் இல்லை

## "கபே" அமைப்பு கூறுகிறது

(கொழும்பு)

அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்தும் திறன் எதிர்க்கட்சிகளிடம் இல்லாமல் போய்விட்டதாகத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான "கபே" தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமடைந்துள்ளதாகத் தேர்தல்களில் போட்டியிடுவது மட்டும் எதிர்க்கட்சிகளின் கடமையாகாது எனவும் 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்து

19 ஆம் பக்கம் பார்க்க

# சமாதானத்தின் சுவையை மக்கள் அனுபவிக்கின்றனர்

(மன்னார்)

வடக்கு மக்களுக்கு சமாதானத்தின் சுவைமிக்க பரிசாக புனரமைக்கப்பட்ட புகையிரதப் பாதை கையளிக்கப்படுவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மடுப் பகுதியில் நேற்று இடம




பெற்ற புகையிரதப் பாதையையும், புகையிரத நிலையத்தையும் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும்

19 ஆம் பக்கம் பார்க்க

# முஸ்லிம்கள் வதைக்கப்படுகின்றனர்

# ஐ.நா.விடம் முறையிட்டாரா அசாத்சாலி?

## கிளம்புகிறது புதிய சர்ச்சை

(கொழும்பு)

இலங்கையில் முஸ்லிம் மக்கள் வதைக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கை ஒன்றை அசாத்சாலி சமர்ப்பித்தாரா என்ற புதிய சர்ச்சை இப்போது கிளம்பியுள்ளது.

இந்த அறிக்கையில் சிங்கள அடிப்படைவாத அமைப்புக்கள் முஸ்லிம் மக்களைக் கொடுமைப்படுத்துவதாக அசாத்சாலி குறிப்பிட்டதாக இந்த புதிய சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

அதேவேளை தமிழ் - முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அசாத் சாலியின் இந்த அறிக்கை பற்றி தமக்கு தெரியாது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர பான் கீ மூனின் பேச்சாளர் மார்டின் நெசர்கீ தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# பாக். யுத்தக்கப்பல் திருமலையில் தரிப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக பாகிஸ்தானின் யுத்தக் கப்பல் ஒன்று திருகோணமலைத்

19 ஆம் பக்கம் பார்க்க

# மின்கட்டண உயர்வுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு

உத்தேசிக்கப்பட்ட மின்கட்டண உயர்வுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மற்றும் அபிவிருத் திக்கான சட்டவுரைஞர்கள் என்னும் சிவில் உரிமைகள் அமைப்பு இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது. உத்தேசிக்கப்பட்ட கட்டண உயர்வு நியாய மற்றதும் அநியாயமானதும் என்பதுடன், உயர் நீதி மன்றம் இதனை சரி செய்யவேண்டும் எனவும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க


# சீவல் தொழிலாளி மரணம் பனையால் விழுந்ததால் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

முப்பத்தைந்து அடி உயரமான பனைமரத்தில் இருந்து தவறிவீழ்ந்து சீவல் தொழிலாளியான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயரப்புலம் இளவாலைப் பகுதியில் நேற்று முன்தினம் பிற பகல் 4.30 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் த்ந்தையான கணபதி சின்னத்தம்பி (வயது-59) என்பவ்ரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய

19 ஆம் பக்கம் பார்க்க




உள்ளே...
தரம் – 5
புலமைப்பரிசில்
மாதிரி வினாத்
தாள்

# தொழில்வாய்ப்பை இலக்காகக் கொண்டே தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்



(கிளிநொச்சி)

இளைஞர், யுவதிகளுக்கு தொழில்சார் பயிற்சிகள் வழங்கப்படும் போது அவர்களுக்கான தொழில்வாய்ப்பை இலக்காகக் கொண்டே பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பிரதேசத்தில் வாழ்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில்சார் பயிற்சிகள் வழங்கப்படும்போது அவர்களுக்கான தொழில்வாய்ப்பை இலக்காகக் கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

மாறாக பிரதேசத்திற்கு பொருத்தமற்ற தொழிற் பயிற்சியினை வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் தொழிலை பெறுவதற்கான வாய்ப்பை இழக்க நேரிடும், இதேவேளை கிராமங்கள் தோறும் பல்வேறுபட்ட தொழில்பயிற்சிகளை பல்வேறு நிறுவனங்களும் வழங்கிவருகின்றன. ஆனால் குறித்த சில நிறுவனங்களில் வழங்கப்படும் சான்றிதழ்கள் பெறுமதியற்ற சான்றிதழ்களாக அமைகின்றன.

எனவே இளைஞர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு பெறுமதியான சான்றிதழ்களை வழங்குவதற்கு பயிற்சிவழங்கும் நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

இதேவேளை மிகமுக்கியமான பயிற்சிகளை வழங்குகின்ற சந்தர்ப்பங்களில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வியாபாரமத்திய நிலையமானது மக்கள் மத்தியில் குறித்த பயிற்சி நெறி சார்ந்த விழிப்புணர்வை சமூகத்திற்கு வழங்குகின்ற சந்தர்ப்பங்களில் அதிகளவான பயனாளிகளை உள்வாங்கிக்கொள்ளமுடியும்.

இதேவேளை தொழில் வாய்ப்பைப்பெற முயற்சிக்கும் இளைஞர், யுவதிகளும் தமது தொழில்சார் தகைமைகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், உள்ளூராட்சி நிவாரண மற்றும் புனர்வாழ்வு கூட்டுறவு கிராமிய அபிவிருத்திக் கைத்தொழில் சமூக சேவைகள் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், கைத்தொழில்துறைத் திணைக்கள பணிப்பாளர் சிவகரன், மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் பிலிசியன், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபை மாவட்ட அலுவலர் சசிகரன், ஆகியோரும் பிரதேச செயலர்களும் மாவட்ட மற்றும் பிரதேச செயலர் பிரிவுகளின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# டெங்கு நோய் தாக்கத்தால் போதனா வைத்தியசாலையில் 9 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் டெங்கு நோயின் தாக்கத்திற்கு இலக்காகிய 9 பேர் அனுமதிக்கப்பட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து இருவரும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து இருவரும், யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து ஐந்து பேருமாகவே இந்த 9 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் சற்றுத் தணிந்திருந்த டெங்கு நோயின் தாக்கம் மீளவும் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் மேலும் தெரியவருகின்றது.

இதற்கு அண்மை நாட்களாக இடையிடையே பெய்துவரும் மழையும் ஒரு காரணமாக அமைவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# நெல்லியடியில் பொதுச்சந்தைக்கு 5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

நெல்லியடிப் பிரதேசத்தில் பொதுச்சந்தையும் கடைத்தொகுதிகளையும் அமைக்கும் பொருட்டு 5 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் என்.சந்திரசேகரனின் கோரிக்கைக்கு இணங்க வடமராட்சி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரினால் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்னர் இங்கு பொதுச் சந்தை இன்மையால் மழை காலங்களில் சந்தை வியாபாரிகள் பல்வேறு நெருக்கடிகளையும் கஷ்டத்தையும் எதிர்நோக்கி வந்த நிலையில் இவர்களின் நிலையை கருத்திற்கொண்டு வர்த்தகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்புதிய கடைத் தொகுதி அமைக்கப்படவுள்ளதுடன் 6 மாதகாலத்திற்குள் கட்டடப் பணிகள் பூர்த்தியாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பொன்னாலைக் கிராமத்தில் மின்விநியோக நடவடிக்கைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் அமைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) பார்வையிடுவதைக் காணலாம்.

# மணிக்கூட்டு கோபுர திறப்புவிழா

யாழ். மாநகர சபையினால் மீள் புனரமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுர திறப்புவிழா நாளை மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 955

திகதி 13.05.2013

வெற்றி எண்கள்: 18 22 29 48 ஆங்கில எழுத்து: E

ஜக்பொட் பரிசு ரூ. 11,437,820/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 11,437,820/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 0 | 10,00,000/= | ரூ. - |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6 | 50,000/= | ரூ. 300,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 265 | 1,000/= | ரூ. 265,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 448 | 1,000/= | ரூ. 448,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11922 | 60/= | ரூ. 715,320/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6215 | 40/= | ரூ. 248,600/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155648 | 20/= | ரூ. 3,112,960/= |
| ஆங்கில எழுத்து | 22555 | 20/= | ரூ. 451,100/= |
| | | மொத்தம் ரூ. | 5,540,980/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| காலி | 604132721-7-07 |
| பதுளை | 604127610-8-08 |
| வவுனியா | 604130718-1-01 |
| பொலன்னறுவை | 604132668-8-18 |
| மொணராகலை | 604121630-9-19 |
| நுவரெலியா | 604124613-8-38 |
| மட்டக்களப்பு | 604129300-5-45 |
| மாத்தளை | 604128114-4-04 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,940,980/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 11,742,400/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.05.16 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333546/7

(C/2747)


# யாழ். போதனா வைத்தியசாலையில் துரித சேவையாற்றும் கண் சிகிச்சைப் பிரிவு

(குருநகர்)

யாழ். போதனா வைத்தியசாலை கண்சிகிச்சைப் பிரிவு புதிய கண் வைத்தியர்களின் வருகையை அடுத்து துரிதமாகவும் மிகக்கூடுதலான நோயாளர்களை உள்வாங்கி நாளாந்தம் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வைத்திய நிபுணர்கள் மலரவன் மற்றும் சந்திரகுமார் தலைமையில் உதவி வைத்தியர்களுடன் சிகிச்சைகள் முன்னெடுக்கப்படுவதால் தினமும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் பயனடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் மலரவன் தலைமையிலும் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் சந்திரகுமார் தலைமையிலும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுவருகின்றன.

வைத்திய நிபுணர்கள் நோயாளிகளுடன் உரையாடி கண்களில் இருக்கும் நோய்த் தாக்கம் மற்றும் குறைபாடுகளை விளக்கமாகத் தெரிவித்து வருவதால் கண்நோய் சம்பந்தமாக மக்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக்களும் கிடைத்து வருகின்றன.

முன்னதாக உதவி வைத்திய நிபுணர்கள் மருந்துகள் கண்களுக்கு விட்டு பரிசோதனை மேற்கொண்ட பின்பாக 90 வீதமான நோயாளர்கள் திரும்பவும் கண்களுக்கு மருந்துகள் விட்டு தலைமை மருத்துவரிடம் அனுப்பப்படுகின்றனர்.

தலைமை வைத்திய அதிகாரி நோயாளிகளுடன் நோய் சம்பந்தமான தகவல்களை வழங்கி ஆலோசனையும் வழங்குவதையும் கடமையாகக் கொண்டுள்ளதால் நோயாளிகள் மத்தியில் திருப்தி நிலவுகின்றது.

கடந்த காலங்களில் எவ்வித ஆலோசனைகளும் நோய் பற்றிய விளக்கங்களும் சொல்லப்படாததால் வெறுமனே பதிவுகளை மேற்கொண்டதான நிலைமையே இருந்து வந்தது.

தற்சமயம் கண்நோய் சிகிச்சைப் பிரிவின் புதிய நடவடிக்கைகளால் அதிக நோயாளர்கள் பயனடைந்து வருவதாகவும் அறியமுடிகின்றது. (68)


சிறுவிளம்பரங்கள்

வீடு விற்பனை

நல்ல சுற்றாடலில் ஒரு காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட இரண்டு வீடுகள் தனித்தனியாகவோ, ஒன்றாகவோ விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: காலை 12 மணி வரையும், மாலை 3 மணிவரையும்.

தொடர்பு: க.சீவறட்ணம் (சிவராசா), றியிஸ்ரார் சம்பந்தர் லேன், சுதுமலை (R/181)

# வளலாய் கலட்டி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அச்சுவேலி)

வளலாய், சல்லி கலட்டி வீதியானது நீண்டகாலமாகப் புனரமைப்பின்றிக் காணப்படுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குண்டும், குழியுமாகக் காணப்படும் இந்த வீதியால் கால்நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்லும் மக்களும்,விவசாய நடவடிக்கைகளுக்காகச் செல்வோரும் பல்வேறு நெருக்கடி நிலைகளைச் சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியானது சமநிலையற்றுக் காணப்படுவதுடன், ஆங்காங்கே சிறுகற்களும் காணப்படுவதால் பாதசாரிகள் போக்குவரத்துச் செய்வதில் சிரமப்படுகின்றனர். மழை காலங்களில் வீதியில் நீர் தேங்கிநிற்பதால் வீதியானது சேறும், சகதியுமாகக் காணப்படுவதுடன், தமது விவசாய விளைபொருட்களை வாகனங்களில் கொண்டு செல்வதில் பல இடையூறுகளை எதிர்கொள்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகளவான உப உணவுத்தயாரிப்புக்கள் மேற்கெள்ளவதோடு இப்பகுதியினர் கால்நடைகளை மேச்சலுக்குக் கொண்டு செல்வற்கு இவ்வீதி மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகிறது. மேலும் அப்பகுதிகளின் இருமருங்கும் அடர்ந்த பற்றையாகக் காணப்படுவதால் இரவு நேரத்தில் அப்பகுதிக்குச் செல்லமுடியாதுள்ளது.

எனவே, வெகுவிரைவில் இந்த வீதியினைப் புனரமைப்புச் செய்து மக்களின் தடங்கலற்ற போக்குவரத்திற்கு வழிசெய்து தருமாறு உரிய தரப்பினரை மக்கள் கேட்டுள்ளனர். (85)

# தேசிய அபிவிருத்தி வங்கியினால் வடக்கு மக்களுக்கு பல்வேறு உதவிகள்

## - வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி -

(வடமராட்சி)

வடபிராந்தியத்தில் போருக்குப்பின்னர் இடம்பெற்று வரும் துரித பொருளாதார அபிவிருத்திக்கு உதவி, மக்களின் வாழ்வாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடனேயே தேசிய அபிவிருத்தி வங்கி செயற்பட்டு வருகின்றது.

எனவே அதன் உன்னத சேவைகளைப் பெற்று தமது பிரதேச அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டும் என தேசிய அபிவிருத்தி வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல்டி மெல் தெரிவித்தார்.

தேசிய அபிவிருத்தி வங்கியின் நெல்லியடிக்கிளையைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றும்போது அவர்இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

நெல்லியடியில் தேசிய அபிவிருத்தி வங்கியின் கிளையை திறந்துவைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். தேசிய அபிவிருத்தி வங்கியின் சேவைகளை வடமராட்சி பிரதேச மக்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே நெல்லியடியில் இத்தேசிய அபிவிருத்தி வங்கி திறந்துவைக்கப்பட்டுள்ளது. மக்கள் இவ்வங்கிச் சேவைகளை முழுமையாகப் பெற்று பயனடையவேண்டும்.

இப்பிரதேசம் மிளகாய், வெங்காயம், திராட்சை உட்பட சிறந்த சாகுபடியைத் தரக்கூடியன. மேலும் விவசாய சமூகத்தினரின் மீது நெல்லியடி நகரின் பொருளாதாரம் தங்கியுள்ளதுடன் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைப் போருக்குப்பின்னரான நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சிறப்பாக வழங்கி வருகின்றது.

இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ள வங்கிக்கிளை ஏராளமான தொழில் முயற்சிகளுக்கான வாய்ப்புக்களை வளர்ந்து வரும் விவசாய சமூகத்தினருக்கு வழங்கத்தயாராகவுள்ளது. இவ்வங்கிக்கிளையினூடாக பிரத்தியேகமாக வழங்கப்பட்ட சிறிய நடுத்தர வர்த்தக வங்கியில் தீர்வுகள் மற்றும் செயற்திறன் மிகு தொழில் முயற்சிக்கான அறிவூட்டல் ஆலோசனைகளை மேம்பாடடைந்துவரும் சிறிய நடுத்தர வர்த்தக முயற்சியாளர்களுக்கு வழங்கவுள்ளது.

சலுகை வட்டி விகிதங்களுடன் கூடிய நீண்ட காலக்கடன்கள், குறுகிய கால முதலீட்டுக் கடன்களை வழங்குதல் நிதி வசதிகள் இறக்குமதி, ஏற்றுமதி நிதியீட்ட வசதிகள் விநியோகஸ்தர் நிதி வசதிகள் உட்பட சிறிய நடுத்தர வர்த்தக வங்கியியல் சேவைகளையும் மக்கள் இங்கு இலகுவாக பெற்றுக்கொள்ளலாம். (01)

# கொடியேற்றத் திருவிழா

(சுன்னாகம்)

சுன்னாகம் மயிலணி திருக்கு, வாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 22 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், மாலை கொடியிறக்கமும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது.

# வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவப் பெருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி ஆதீனம் மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகோற்சவப் பெருவிழா இன்று ஆரம்பமாகிறது.

இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும இப்பெருவிழாவில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு வேட்டைத்திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் புதன்கிழமை சப்பறத்திருவிழா மாலை 8 மணிக்கு இடம் பெறுவதோடு 23 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பூங்காவன உற்சவமும், ஞாயிற்றுக்கிழமை மாலை வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு பண்டிதர் கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் மகோற்சவ குரு இரத்தின வைத்தியநாதக்குருக்கள் விழாவினை நடாத்திவைப்பார்கள்.

விழாக்கள் தினமும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி 12.30 மணிக்கு பூர்த்தியடையும் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி 9.30 மணிக்கு நிறைவுபெறும் என்றும் பகல் மகேஸ்வர பூஜை தினமும் இடம்பெறும் என்றும் ஆலய பரிபாலனசபையினரும், உபயகாரர்களும் அறியத்தந்துள்ளனர். (43)

# மாணவர்களிடையே நடத்தப்பட்ட சமயம்சார் போட்டிகளின் முடிவுகள்

(கல்வயல்)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**ஆத்தி சூடி**

சி.சிசாந்தன், இ.சானுஜா, ச.சுவேதா

**பஞ்சபுராணம்**

ஜீ.யதுளன், இ.திலக்ஷனா, பா.சினேகா

**தோரணம்**

மத்திய பிரிவு

பா.சினேகா, ச.நிதர்சனா, ச.கஜானன்

மேற்பிரிவு

இ.சோபனா,ஜீ.யதுளன்

**கோலம்**

கீழ்பிரிவு

இ.சானுஜா, ச.நிதர்சனா, ப.டினோஜா

மத்திய பிரிவு

பா.சினேகா, தி.சோபினி, து.தனுராஜ், ச.சாஜா

மேற்பிரிவு

ஜீ.யதுளன், ம.பானுஜா

**திருக்குறள்**

மத்திய பிரிவு

இ.திலக்ஷனா, பா.சினேகா, பா.லதுசா

மேற்பிரிவு

கு.லக்ஸன், ஜீ.யதுளன், ம.பானுஜா

**பேச்சு**

மத்திய பிரிவு

பா. ஜானுஜன், பா.சினேகா, இ.திலக்ஷனா

மேற்பிரிவு

ஜீ.யதுளன், இ.சோபனா, ம.பானுஜா

**நிறைகுடம் வைத்தல்**

மத்திய பிரிவு

இ.திலக்ஷனா, பா. ஜானுஜன், ச.சாஜா

மேற்பிரிவு

இ.சோபனா, ஜீ.யதுளன், ம.பானுஜா

**கவிதை**

பா.தேனுஜா, ஜி.யதுளன், இ.சோபனா

**கட்டுரை**

மத்திய பிரிவு

இ. திலக்ஷனா, பா.சினேகா, ச.சுவேதா, சு.மானுஜா.

மேற்பிரிவு

ஜீ.யதுளன், பா.தேனுஜா, இ.சோபனா.

(43,இ)

# மடம் வீதி புனரமைக்கப்படுமா?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திற்கு அருகாகச் செல்லும் மடம் வீதியானது நீண்டகாலமாக புனரமைப்பின்றிக் காணப்படுவதாக அந்த வீதியால் பயணம் செய்வோர் தெரிவிக்கின்றனர்.

குண்டும், குழியுமாகக் காணப்படும் இந்த வீதியால் பாதசாரிகளும், ஏனைய வாகனங்களில் பயணம் செய்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்த வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் உரிய தரப்பினரைக் கேட்டுள்ளனர். (85)



இலங்கை வங்கியின் 'ரன்கெகுளு' சிறுவர் சேமிப்புக் கணக்கின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும், நிகழ்வு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது. இதில் இலங்கை வங்கியின் முகாமையாளர் ஒருவர் மாணவர்களுக்கு பரசில் வழங்கிக் கௌரவிப்பதனையும், நிகழ்வில் கலந்துகெண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும், வங்கியினால் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் காணலாம். (படங்கள்: ஆர்.இராஜகுமார்)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பிழைப்பைக் கெடுக்கும் நினைப்பு!

வடக்கிலே ஏ9 நெடுஞ்சாலை துரித கதியில் புனரமைத்து முடிக்கப்பட்டு, வீதி நெடுகலாக இரவு பகலாக வாகனங்கள் ஓடித் திரிகின்றன. புதிய மதகுகள் அமைக்கப்பட்டு மின்சார கம்பங்கள் அகட்டி நடப்பட்டு வீதியின் இரு மருங்கிலும் கடைகளின் வெளிச்சங்கள் இரவிரவாக பாட்டுச்சத்தங்களுடன் இருக்கின்றன. வடக்கிற்கான பழைய தொடருந்துப்பாதை இருந்த இடம் மீண்டும் கிளறி எடுக்கப்பட்டு புதிய பாதைக்கான பணிகள் விரைவாக நடைபெறுகின்றன.

புதிய தனியார் வங்கிகள், அரச பணிமனைகள், என் புதிதாக நவீன கட்டிட தொகுதிகள் எழுந்து வருகின்றன. தொலைத் தொடர்பு கோபுரங்கள் ஆங்காங்கே வானத்தை நோக்கி வளர்ந்துள்ளன. இவற்றிற்கு தகுந்தாற்போல தனியார் கடைகளின் புதிதாக வரையப்பட்ட பெயர்ப்பலகைகள் வர்ண ஜாலம் காட்டி நிற்கின்றன. இதற்கும் மேலாக இராணுவ பிரசன்னத்தின் விகிதம் கூட வெகுவாகக் குறைந்துவிட்டது . . .

இது வடக்கிற்கு "விசிற்" வந்துவிட்டுச் சென்ற புலம்பெயர் தமிழர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து நடத்தும் இணையத்தளம் ஒன்றில் எழுதியிருக்கும் வருணனை. மறைக்க முடியாத இவ்வளவையும் எழுதிவிட்டு, அவர் கடைசியில் சொல்லியிருக்கும் "கொமென்ற்"தான், நம்மவர்களால் இப்போது கூட எங்களிடமிருக்கும் அபத்தத்தை விளங்க முடியாதிருக்கும் அந்த உலகமகா குசும்பு: "எல்லாம் வெளிநாடுகளில இருக்கும் எங்கட ஆக்களின்ர அயராத உழைப்பால தான் இவங்கள் இந்தளவுக்கெண்டாலும் செய்யிறாங்கள்" என்றார் முதிய்வர் ஒருவர், என்று முத்தாய்ப்பு வைக்கிறார் அந்த வருணனைக்கு.

அதாவது ஜெனீவா மாநாடு, ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயங்களின் போதெல்லாம் ஆர்ப்பாட்டங்களை நடத்தி, இலங்கை அரசாங்கத்தை ஒரு மிரட்டு மிரட்டிவிட்டார்களாம். அதன்விளைவாக சர்வதேசத்திற்குக் காட்டுவதற்காகவே இலங்கை அரசு வடக்கில் இவைகளைச் செய்துவருகிறதாம்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் போதே, முன்னர் கொழும்புத் தமிழர்கள் தனியே சந்தித்தால் 'கதைத்து'க்கொண்டிருந்த சங்கதிதான் ஞாபகத்தில் வந்தது. "எங்கட பெடியள் இவைக்குக் குடுக்கிற கிலியாலதான் கொஞ்சமெண்டாலும் இஞ்சை நாங்கள் நடப்பாத் திரியக் கூடியதாயிருக்கு. இல்லையெண்டால் சிங்களவன் இந்தளவுக்கும் நம்மை விடமாட்டான். . ." இப்படித்தான் நாம் அப்போது கதைத்துக் கொண்டிருந்தோம்.

இப்போது கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கைப் பகுதிகளிலும் இருக்கும் தமிழர்கள், நம் புலம்பெயர்ந்த தமிழர்கள் அங்கிருந்துகொண்டே இலங்கை அரசாங்கத்தை ஒரு மிரட்டு மிரட்டிக்கொண்டிருப்பதால்தான் பாதுகாப்பாகவும் நடப்பாகவும் திரிய முடிவதாக மனதுக்குள் நினைத்துக் கொள்கிறார்களோ என்னவோ! "நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கிறது" என்று ஊர்ப்பேச்சுவழக்கில் நாம் கதைத்துக்கொள்வது இவ்வாறான நம் எல்லோர்க்குமாகச் சேர்த்துத்தான் போலும்!

இப்போதும் நம் புலம்பெயர் – உள்ளூர் கட்டுரையாளர்கள் நாம் 'வீரமுடன் முன்னேறி வருவதாகவே' எழுதிவருவதை நாம் எப்படித்தான் புரிந்துகொள்வது?

நாம் ஆயுதங்களின் மூலமோ அல்லது இந்தியா மூலமோ அமெரிக்கா மூலமோ இலங்கை அரசைப் பயமுறுத்தித்தான் எமக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்வோம். அரசுடன் அல்லது இந்த நாட்டில் சேர்ந்தொன்றாய் வாழப்போகும் பெரும்பான்மை சமூகத்துடன் இணக்கம் கண்டோ பேச்சு நடத்தியோ எதையும் பெற மாட்டோம். அது நம் தமிழ் அகம்பாவத்திற்கு இழுக்காகிவிடும் என்ற நினைப்பிலேயே இன்னும் எவ்வளவு காலத்திற்கு மக்களை ஏமாற்றி அரசியல் செய்து அந்தரிக்க விடப்போகிறார்கள்?

\- ஆசிரியர்

# மேற்குலக நாடுகளிடம் நிதியுதவி; நிரூபித்தால் அமைப்பு கலைக்கப்படும்

## பொதுபலசேனா

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பு நோர்வே, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளிடம் இருந்து நிதியுதவிகளைப் பெற்றுள்ளது என்பதை நிரூபித்தால், மக்களிடம் மன்னிப்புக் கோரி இரண்டு மணிநேரத்தில் தமது அமைப்பைக் கலைத்து விடுவதாக அதன் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். பொதுபலசேனா அமைப்பு மேற்குலக நாடுகளிடம் இருந்து நிதியுதவிகளை பெற்றுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளதாகவும் அதனை நிரூபித்துக் காட்டுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் வீரவன்ச, வீரவன்ச அல்ல அவர் பொய்வன்ச எனவும் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

அதேவேளை இதற்கு பதிலளித்துள்ள அமைச்சர் வீரவன்ச, தாம் பௌத்த பிக்குமாரைப் பெரிதும் மதிப்பதாகவும் ஞானசார தேரர், இந்தச் சவாலை நோர்வே தூதரகம் அல்லது தமது அமைப்பின் கட்டளையிடும் அதிகாரியான டிலந்த விதானகே ஆகியதரப்பிற்கு விடுக்கவேண்டும் எனவும் நோர்வே தூதரகம் மற்றும் டிலந்த விதானகே ஆகியோர் இணையத் தளங்களுக்கு வழங்கிய பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமே தான் அவ்வாறு தெரிவித்திருந்ததாகவும் இதனால் இந்த சவால் தனக்குரியதல்ல எனவும் கூறியுள்ளார்.

# நீதிமன்றில் ஆஜரான அமைச்சர் மேர்வின்

(கொழும்பு)

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா நீதிமன்றத்தில் நேற்று ஆஜரானார். 1999 ஆம் ஆண்டு எப்பாவல தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் மீது குண்டுவீசிய சம்பவம் தொடர்பில் சாட் சியளிப்பதற்கே அவர் நீதி மன்றத்தில் ஆஜரானார்.

அந்தக் காலப்பகுதியில் அமைச்சர் மேர்வின் சில்வா ஐக்கிய தேசியக்கட்சியில் அங்கம் வகித்தார். இந்த வழக்கு, அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் சாட்சியளிப்பதற்காக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு திரட்டும் வகையில் இந்தப் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. இதன்போது மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல் சம்பவத்திற்கு எதிராக எப்பாவலயைச் சேர்ந்த வசந்த என்பருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டது. அந்தச் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இயற்கை அனர்த்தத்தால் இதுவரை 7 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையால் இதுவரையில் 7 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

மலையகத்தின் நுவரெலியா மாவட்ட பெயார்வெல் மற்றும் டிக்ஓயா பகுதிகளில் நான்கு பேர் பலியாகினர். அத்துடன் நாகசேனை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி மாவட்டங்களில் 3 பேர் பலியானதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. சீரற்ற காலநிலையால் இதுவரையில் 319 குடும்பங்களைச் சேர்ந்த 1139 பேர் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

# பறவைக்காய்ச்சல் அபாயம்; உணவு இறக்குமதிக்கு தடை

(கொழும்பு)

மிருக உற்பத்தி மற்றும் ஆரோக்கிய திணைக்களம், பறவைக் காய்ச்சல் அபாயம் உள்ளது என இனங்காணப்பட்ட நாடுகளிலிருந்து உணவு எதையும் இறக்குமதி செய்வது இல்லை என்று தீர்மானித்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.கே.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் இவ்வாறான அபாயம் இல்லை என அறிவிக்கும்வரை இது தொடரும் எனவும் அவர் கூறினார். இந்தத் திணைக்களம் புலம் பெயர்ந்து இலங்கைக்கு வரும் பறவைகளில் பறவைக் காய்ச்சல் வைரஸ் உள்ளதாவென அறிய மாதிரிகளை சோதித்து வருகின்றது.

நாட்டினுள் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயம் வெகுவாக குறைந்துள்ளது. ஆனால் திணைக்களம் சோதனைகளை நிறுத்தமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றறிக்கையை உதாசீனம் செய்யும் அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று

(கொழும்பு)

உயர்தர வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பான புதிய சுற்றறிக்கையை உதாசீனம் செய்யும் பாடசாலை அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக கல்வி அமைச்சு தெரிவித்தது.

இந்தச் சுற்றறிக்கையின் படி ஆகவும் குறைந்த பெறுபேறாயினும் க.பொ.த (உயர்தரம்) புடிக்கத் தகுதி பெற்ற சகலரையும் முதலில் அனுமதிக்க வேண்டும். அருகிலுள்ள வேறு பாடசாலை மாணவர்களை இரண்டாவது தெரிவாக அனுமதிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வகையில் உயர்தர வகுப்புள்ள பாடசாலை எதுவுமில்லாத பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த மாணவர்கள் முன்னுரிமை பெறுவர். இதன் பின்னர் வகுப்பில் இடமிருப்பின் வேறு பாடசாலை அனுமதிக்கலாம். இந்த சுற்றறிக்கையை மீறும் பாடசாலை அதிபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.


# மாத்தளை மனிதப் புதைகுழி விசாரணைகள் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

மாத்தளை மனிதப் புதைக்குழி விவகாரம் தொடர்பில் சத்திய வாக்குமூலமனு அளித்த 13 பேரிடம் வாக்குமூலம் பெறும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது குறித்த நடவடிக்கைகளை இரகசியப் பொலிஸார் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு மாத்தளை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுதாரர்கள் 13 பேர் கடந்த 8ஆம் திகதி சத்திய வாக்குமூலமனு அளித்தனர். 88-89 ஆம் ஆண்டு காலங்களில் காணாமற்போன தமது உறவினர்களின் எலும்புக்கூடுகள் மாத்தளை மனிதப் புதைக்குழியில் இருப்பதாக மனுதாரர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

குறித்த 13 பேரையும் மனு பிரதிவாதிகளாக ஏற்றுக் கொள்ள மாத்தளை நீதவான் இணக்கம் தெரிவித்தார். அத்துடன் குறித்த 13 பேரிடமும் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளுமாறு இரகசியப் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். இந்த நடவடிக்கைகளை மே 30ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யுமாறும் நீதவான் பணித்தார்.



> கடற்புலிகள் அரசியல் கட்டமைப்பை தங்களது பிரிவில் சிறப்பாக வைத்திருந்தமை விடுதலைப் புலிகளின் ஏனைய துறையினருக்கு விருப்பம் இல்லாத ஒரு செயற்பாடாகவே இருந்து வந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதிக்குள் பொதுமக்களோ ஏனைய பிரிவுப் போராளிகளோ உள்நுழைவதானால் கடற்புலிகளின் விசேட அனுமதி பெற்றே உள் நுழைய முடிந்தது. இதற்கென சிறப்பு சோதனைச் சாவடிகளையும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உள்நுழைவு வாயில்களில் நிறுவி இருந்தனர். கடற்புலிகளின் செயற்பாடு கடலில் மட்டும் இல்லாமல் தரையிலும் அவர்களினுடைய ஆதிக்கம் வலுவாக இருந்தமை ஏனைய துறையினருக்கு விருப்பத்திற்குரிய நடவடிக்கையாக இருக்கவில்லை.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 39

**வே. அர்ச்சுணன்**

புதுவை இரத்தினதுரையின் இந்தச் செயற்பாடு தொடர்பில் கடுமையான கோபம் அடைந்த கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை புதுவை இரத்தினதுரையை தூக்கி உள்ளே போடவேண்டும் இவ்வாறு புதுவையை உள்ளே போட்டால்தான் ஏனையவர்கள் திருந்துவார்கள் என விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனிடம் அழுத்தம் திருத்தமாக கூறி அதற்குரிய அனுமதியைத் தருமாறு அடம்பிடித்த போதும் பிரபாகரன் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டார்.

அதாவது இந்த நெருக்கடியரன சூழ்நிலையில் புதுவை இரத்தினதுரையை தூக்கி உள்ளே போட்டால் மேலும் குழப்பங்கள் உருவாகுமே தவிர இதனால் விமோசனம் எதுவுமே ஏற்படாது என சூசைக்குக் கூறியதுடன் சூசையை சமாதானப்படுத்தி அனுப்பியும் வைத்தார்.

இருந்தபோதிலும் புதுவையினுடைய இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் கடுமையான விசனத்துடன் இருந்த சூசை நடேசன், கஸ்ரோ, புலித்தேவன், பொட்டம்மான் போன்றவர்களுடன் புதுவையின் செயற்பாடுகள் தொடர்பில் தனது கடும் ஆட்சேபனையை வெளியிட்டதுடன் புதுவை தொடர்பில் எப்பொழுதும் கவனமாக நடக்கவேண்டுமெனவும் இவர்களுடன் சாதாரணமாக உரையாடுகின்ற பொழுது கூறிவந்தார். இதைவிட கடற்புலிகள் தங்களது முகாம்களில் ஒலிபரப்பி வந்த புதுவையினுடைய பாடல்களை இதன்பின் தமது முகாம்களில் ஒலிபரப்புவதை தவிர்த்து வந்தனர்.

அதாவது புலிகள் இயக்கத்தில் பல பிரிவுகள் காணப்பட்டபோதிலும் கடற்புலிகளைப் பொறுத்தவரையில் அது ஒரு தனிப்பிரிவாகவும், தனக்கென்று வரையறுக்கப்பட்ட ஒரு கட்டமைப்பைக் கொண்ட ஒரு பிரிவாகவும் செயற்படுவதற்கு பிரபாகரன் அனுமதி வழங்கியிருந்தார். தொண்டமனாறிலிருந்து திருகோணமலை வரையிலான கரையோரப் பகுதிகளிற்கு கடற்புலிகள் தங்களது கரையோர பொறுப்பாளர்களை நியமித்திருந்ததுடன் அந்தப் பகுதியினுடைய நிர்வாகக் கட்டமைப்பை கடற்புலிகளே கையாண்டு வந்தனர். இதற்கென கடற்புலிகளிற்கென்று பிறிதான அரசியல்துறை கட்டமைப்பு ஒன்றும் செயற்பட்டு வந்தது. இந்த அரசியல்துறை கட்டமைப்பிற்கு பொறுப்பாக இரண்டு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். விநாயகம் என்ற கடற்புலிகளின் தளபதி ஒருவரும், பூரணி என்ற கடற்புலிகளின் பெண் தளபதி ஒருவருமே இந்தத் துறைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

பின்னைய நாட்களில் யுத்தம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தபொழுது சுண்டிக்குளம் சாலைப் பகுதியில் இடம்பெற்ற படையினரின் (பொக்ஸ்) சுற்றிவளைப்பின் போது விநாயகம் சாவைத்தழுவ வேண்டி ஏற்பட்டது. களமுனைக்கு செல்வதற்கு விநாயகம் பின்னடித்துக் கொண்டிருப்பதாக சூசை கருதிக் கொண்டதால் விநாயகத்திற்கு ஒரு தொகுதி போராளிகளையும் கொடுத்து சுண்டிக்குளம் சாலைப் பகுதியில் களம் இறக்கிய பொழுது விநாயகம் அங்கு சாவைத் தழுவிக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் பூரணியும் இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் காணாமல் போயிருந்தார்.

இவ்வாறு கடற்புலிகள் அரசியல் கட்டமைப்பை தங்களது பிரிவில் சிறப்பாக வைத்திருந்தமை விடுதலைப் புலிகளின் ஏனைய துறையினருக்கு விருப்பம் இல்லாத ஒரு செயற்பாடாகவே இருந்து வந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதிக்குள் பொதுமக்களோ ஏனைய பிரிவுப் போராளிகளோ உள்நுழைவதானால் கடற்புலிகளின் விசேட அனுமதி பெற்றே உள் நுழைய முடிந்தது. இதற்கென சிறப்பு சோதனைச் சாவடிகளையும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உள்நுழைவு வாயில்களில் நிறுவி இருந்தனர்.

கடற்புலிகளின் செயற்பாடு கடலில் மட்டும் இல்லாமல் தரையிலும் அவர்களினுடைய ஆதிக்கம் வலுவாக இருந்தமை ஏனைய துறையினருக்கு விருப்பத்திற்குரிய நடவடிக்கையாக இருக்கவில்லை. அதாவது கடற்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளின் புலனாய்வுத் துறையினர், காவல்துறையினர் ஆகிய பிரிவுகளின் செயற்பாடுகள் இருந்தபோதிலும் அரசியல் துறையினருடைய செயற்பாடுகள் அங்கு இருக்கவில்லை. இப்பகுதியில் கடற்புலிகளின் அரசியல் துறையின் செயற்பாடுகளே இருந்து வந்தது. இவ்வாறு கடற்புலிகள் ஒரு சிறப்பு படைப்பிரிவாக சகல வளங்களையும் உடைய ஒரு கட்டமைப்பாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக உணவு உட்பட நிதி போன்ற முக்கியமான விடயங்கள் கூட ஏனைய துறைகளிடம் தங்கியிருக்காமல் நேரடியாக இவர்களே கையாளுகின்ற அளவிற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் கடற்புலிப் போராளிகள் ஆரம்பத்தில் அனுபவித்ததைப் போன்று பின்னைய நாட்களில் அனுபவிக்க முடியவில்லை. அதாவது 1992 - 1995 காலப்பகுதிகளில் கடற்புலிகளின் பாசறைகளில் தேவைக்கு அதிகமாக உணவுகள் காணப்பட்டதுடன் குளிர்பானங்கள், கண்டோஸ் வகைகள் என்பன தேவைக்கு அதிகமாக தேக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் பின்னைய நாட்களில் போராளிகளின் தொகை கூடியதுடன் உணவுப் பொருட்களின் சேமிப்பும் மட்டுப்படுத்தப்பட்டது.

1992 - 1995 காலப்பகுதியில் கடற்புலிகளின் கரையோர ஆயுத விநியோகத்திற்கு பொறுப்பாக இருந்த அன்பப்பா என்ற வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த கடற்புலிகளின் பொறுப்பாளர் ஒருவர் நாகர் கோவிலிலிருந்து முல்லைத்தீவு வரையான கரையோரப் பகுதிகளின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தவாறு வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள்மூலம் எடுத்து வரப்பட்ட ஆயுதங்களையும், ஏனைய அத்தியாவசியப் பொருட்களான சீருடைகள், உட்படப் பல்வேறு தேவைகளுக்குரிய பொருட்களையும் இறக்குகின்ற பணிக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வந்தார். இவரின் பொறுப்பில் அன்றைய நெருக்கடியான காலப்பகுதியிலும் 5இற்கும் மேற்பட்ட படகுகள் இவரது பொறுப்பில் செயற்பட்டு வந்தன.

இக்காலப் பகுதியில் இலங்கை கடற்படையைப் பொறுத்தவரையில் பெரியளவிலான வளத்துடன் இல்லாதபோதிலும் கடற்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தும் நோக்குடன் தங்களது ரோந்து நடவடிக்கைகளை கடற்படையினர் தீவிரமாக மேற்கொண்டு வந்தனர். கடற்படையினர் தங்கள் வசம் இருந்த "வீரையா சூரையா" என்ற கடற்படை போர்க்கப்பலை சிறப்பாகப் பயன்படுத்தி வந்தனர். குறித்த போர்க்கப்பல் நடமாட்டம் காணப்பட்டால் அன்றையதினம் கடற்புலிகளின் விநியோகச் செயற்பாடுகள் எதுவுமே கடலிலே நடக்காது அந்தளவிற்கு வீரையா சூரையா மீது கடற்புலிகளிற்கு அச்சம் இருந்தது. இருந்த போதிலும் கடற்படையினரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு அன்பப்பா எப்படியும் தனது விநியோக வேலைத்திட்டத்தை எப்படியோ முடித்து விட்டுவிடுவார்.


கடற்படையினரின் கரையோர ரோந்து நடவடிக்கைகளை முறியடித்தவாறு தனது விநியோக வேலைத்திட்டத்தை அன்பப்பா திறம்படமேற்கொண்டதுடன் போராளிகளுடனும் அன்புடன் பழகிவந்தார். அதாவது போராளிகளுக்கு பழரசங்களிலிருந்து தேவையான அனைத்தையும் வாங்கிக் கொடுத்து வந்தார். இருந்தபோதிலும் பின்னைய நாட்களில் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசையுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக இயக்கத்தை விட்டு வெளியேறி ஐரோப்பிய நாடு ஒன்றில் தஞ்சம் அடைந்து கொண்டார். பின்னர் வேறு பெயரில் இவர் ஐரோப்பிய நாடு ஒன்றில் கடற்புலிகளின் வேலைத்திட்டத்தை முன்னெடுத்ததாகவும் பின்னர் அந்தச் செயற்பாட்டிலும் இருந்து ஒதுங்கி தற்போது தனது குடும்ப வாழ்வை முன்னெடுத்து வருவதாகவும் தெரிகிறது.

இவ்வாறு கடற்புலிகள் அணியினர் தனி அலகாக செயற்பட்ட போதிலும் பல கருத்து முரண்பாடுகளை உள்ளகத்தே கொண்டே செயற்பட்டு வந்தனர். கடற்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவராக இருந்த காதர் என்ற தளபதி ஒருபோதுமே முன்னணிக்கு வரமுடியாமல் இருந்தமைக்குப்பல காரணங்கள் இருந்தன. இவற்றைத்தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா அல்லது அறிந்தும் இவைதொடர்பில் விமர்சனங்களை முன்வைக்காமல் விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் தமிழ் ஊடகங்களும் செயற்பட்டனவா என்பதைத்தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# சம்பூர் நிலக்கரி மின் நிலையத்தால் 7.3 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படும்

## என்கிறது ஊழலுக்கு எதிரான கூட்டமைப்பு



(கொழும்பு)

சம்பூர் நிலக்கரி மின் நிலையம் அமைக்கப்பட்டதன் பின்னர் ஆண்டுக்கு 7.3 பில்லியன் ரூபா இலங்கை மின்சார சபைக்கு மேலும் நஷ்டம் ஏற்படும் என்று ஊழலுக்கு எதிரான கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை ஏற்கனவே நஷ்டமடைந்துள்ள நிலையில் இன்னும் நஷ்டமடையும் என்றும் அவ்வமைப்பு அறிவித்துள்ளது.

இந்த மின் நிலையத்தை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ள முறைக்கேடு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பேச்சாளர் சமன் தேசப்பிரிய தெரிவித்தார்.

குறைந்தளவு வினைத்திறனுள்ள மின் உற்பததித் தொகுதியை அமைப்பதற்கான ஒப்பந்தம் காரணமாக ஆண்டுக்கு 4.9 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

அத்துடன் தரக்குறைவான அந்தத் தொகுதியை பாராமரிக்க ஆண்டுக்கு 1.2 பில்லியன் ரூபா கூடுதலாகவும் தேவைப்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். மேலும், சம்பூர் மின் உற்பத்தியில் கிடைக்கும் இலாபம், சர்வதேச நியமனங்களுடன் ஒப்பிடுகையில் ஆண்டுககு 1.2 பில்லியன் ரூபா குறைவானதாகலாம். இந்த அடிப்படையில் சம்பூர் மின் உற்பத்தி நிலையம் மொத்தமாக ஆண்டுககு 7.3 பில்லியன் ரூபா நட்டம் அடையவுள்ளது. இந்த நஷ்டத்தை இவ்வாறான பாதகமான ஒப்பந்தத்திற்கு காரணமான அதிகாரிகளிடமிருந்து அறவிடவேண்டும் என்றும் அந்த சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டமைப்பானது மின் கட்டண அதிகரப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அவர தெரிவித்தார்.


## பலவீனமடைந்துள்ள எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் மிகவும் பலவீனமடைந்துள்ளதாக இலங்கையின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான கபே தெரிவித்துள்ளது. தேர்தல்களில் போட்டியிடுவது மட்டும் எதிர்க்கட்சிகளின் கடமையாகாது என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பில் நிலவும் மக்கள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மின் சாரக் கட்டண உயர்விற்கு எதிரான மக்களின் எதிர்ப்பைக் கூட சரியான முறையில் எதிர்க்கட்சிகளினால் வெளிப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எதிர்க்கட்சிகள் தங்களது நோக்கங்களுக்காகவே செயற்படுகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## தனித்துப் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ்




(கொழும்பு)

வட மாகாணசபைத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் கூட்டணி சேராது எனவும், தனித்துத் தேர்தலில் போட்டியிட உள்ளதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் கட்சியின் பொதுச செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

மேலும், சில கடும்போக்குவாத சக்திகளின் தேவையற்ற அடக்குமுறைகள் குறித்து முஸ்லிம்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ள போதிலும், பொலிஸார் அதனைக் கவனத்திற கொள்ளத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது. 17 ஆம் திருத்தச் சட்டத்தில் காணப்படும் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை இரத்துச் செய்யும் வகையில் 19 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப் படவுள்ளதாக ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை இரத்துச் செய்வது அநீதியானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் எனவும், 19 ஆம் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் ஹசன் அலி மேலும் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 18 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ள யுத்த வெற்றி நிகழ்விற்காக காலி முகத்திடலில் படையினர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளனர்.

## மத்தல விமான நிலையத்தின் செயற்பாடுகளை ஆராய குழு

(கொழும்பு)

புதிதாக திறக்கப்பட்ட மத்தல மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும்போது முன்னுரிமை கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தவென இக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தெரிவித்தார்.

மத்தல விமான நிலையத்தால் இலங்கைக்கு எவ்வித பயனும் இல்லை எனவும் அது வீண் பண விரயம் என்றும் உகந்த இடத்தில் அது அமைக்கப்படவில்லை என்றும் எதிர்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன. அத்துடன் விமான ஓடுபாதையில் பறவைகள் தொல்லை காணப்படுவதால் விபத்து அபாயம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் எயார் அராபியா என்ற விமான நிறுவனம் அண்மையில் மத்தல விமான சேவையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எண்ணெய் சுத்திகரிப்பு தொடர்பில் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் ஒரேயொரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமான சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் முழுமையாக இடைநிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதும் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே இடம்பெறுவதாக இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இன்னும் மசகு எண்ணெய் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் மசகு எண்ணெய் கிடைக்காத பட்சத்தில், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திரிப்பு நிலையத்தின் பணிகள் முற்றாக இடைநிறுத்தப்படலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அதிகாரிகள் உரிய நேரத்தில் மசகு எண்ணையை பெற்றுக்கொள்ள தவறியமையே இதற்கான காரணம் என்றும் தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

# அடக்குமுறையை நோக்கியே அரசாங்கம் நகர்கிறது

## என்கிறார் கமகே

(கொழும்பு)

வரலாற்றில் என்றுமில்லாத அடக்கு முறையை நோக்கியே அரசாங்கம் செல்ல முற்படுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான தயா கமஹே தெரிவித்துள்ளார்.

மின் கட்டணத்தை உயர்த்தியது அரசாங்கத்தின் சூழ்ச்சியாகும். அரசாங்கத்தின் மக்கள் எதிர்ப்பு செயற்பாடுகளை ஊடகங்கள் ஊடாக தெரிந்து கொளவதற்கான சந்தர்ப்பத்தை இல்லாதொழிப்பதே மின் கட்டண அதிகரிப்புக்கான சூழ்ச்சிகளில் ஒன்றாகும்

பயங்கரவாதம் இலங்கையில் நிலவியபோது கூட சுதந்திரமாக நாம் இயங்கினோம். வடக்கில் மட்டுமே பிரச்சினைகள் அதிகமாக இருந்தன.

ஆனால் இன்று நாடே பிரச்சினைகளை சந்திக்கின்றது. அசாதாரணமான விலையேற்றத்தினால் மக்கள் சுதந்திரத்தினையும் உரிமையையும் இழந்து தவிக்கின்றனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இன்று டியூசன் வகுப்புக்கு பிள்ளைகளை அனுப்புவது முதல் சீனி வாங்குவது வரை அதிகரித்த விலையேற்றத்தால் மக்கள் அவதிப்படுகின்றனர்.

பஸ் கட்டணம், காஸ் விலை என்றே அன்றாடம் மக்கள் தலையில் விலையேற்ற சுமை இறக்கி வைக்கப்படுகின்றது.

# மலையகத்தில் மழை; வெள்ளத்தில் மூவர் பலி

(கொழும்பு)

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா பிரதேசத்தில் வெள்ளத்தில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

டிக்கோயா பிரதேசத்தில் பெய்த அதிக மழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இந் நிலையில் வீடு ஒனறில் இருந்த 7 வயதுச் சிறுமி ஒருவரும் 60 வயது முதியவர் ஒருவரும் வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இதே வீட்டில் இருந்த 42 வயதுடைய பெண் ஒருவர் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமற்போயுள்ளார்.

இதேவேளை லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டீ மலை கொளணியில் 7 வயதுடைய சிறுமி ஒருவர் மண்மேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த இவரது சடலம் லிந்துலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கார்மேல் மாதா ஆலய புனரமைப்புக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் பகுதியிலுள்ள புனித கார்மேல்மாதா தேவாலயத்தின் மீது இடி வீழ்ந்ததில் தேவாலயத்தின் ஒருபகுதி சேதமடைந்துள்ளது.

இடி வீழ்ந்து சேதமடைந்த குருநகர் புனித கார்மேல் மாதா தேவாலயத்தை ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்த்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதுடன், சேதவிபரங்களையும் ஆராய்ந்தறிந்து கொண்டனர்.



இதேவேளை, சேதமடைந்த தேவாலய புனரமைப்பு பணிக்கு நிதியுதவியினை பெற்றுத் தருவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

# கணித நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்து முதலிடம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கணித நாடகப் போட்டியில் சிரேஷ்ர பிரிவினருக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் விவேகம் எனும் கணித நாடகம் முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு மாகாண மட்டப்போட்டியில் பங்குபற்றவுள்ளது.

இந்நாடகத்திற்கான எழுத்துரு நெறியாழ்கையினை கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மேற்கொண்டுள்ளார். நடிகர்களாக தவேன்சன், ரிதுசன், சுஜிவன், சோபிதன், குகதாசன் கோபிராஜ், தாருசன், சஞ்சிவன், டினோஜன், அகிலன், மகிந்தன், ஜயகோபன் ஆகியோர் நடித்துள்ளனர். இசையினை றோய் ராஜ்குமார் டிலிப்குமார் ஆகியோர் மேற்கொண்டனர்.

கனிஷ்ர பிரிவினருக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உயர்வு எனும் நாடகம் 2 ஆம் இடத்தினை பெற்றுக்கொண்டது.

இந்நாடகத்தில் நடிகர்களாக திஸ்னுகன், சங்கீர்த்தனன், கலைக்சன் சானுஜன், தனுஜன், சிவானுஜன், டிபேர்டன், சதிஸ்குமார், குபேரன், டனிஸ்ரன், தவரூபன் ,யதுசன் ஆகியோர் நடித்துள்ளனர்.

## மகோற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(85)

## விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலைக்கு அதிபர் பதவிக்கு யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர் சேவை வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது பாடசாலை அதிபராக உள்ளவர்கள் அப்பாடசாலையில் 2013 ஜுலை 20 ஆம் திகதியன்று மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அத்துடன் 3 வருடங்கள் தொடர்ந்து கடமையாற்றக்கூடிய வயதெல்லை கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை நிர்வாகக் கிளையில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.




# பதவியேற்பு விழா அழைப்பை நிராகரித்தார் இந்திய பிரதமர்



(புதுடில்லி)

பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்கவுள்ள நவாஷ் செரீப், பதவியேற்பு விழாவில் பங்கேற்குமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் அந்த அழைப்பினை இந்திய பிரதமர் நிராகரித்து விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்க உள்ள நவாஸ் செரீப்பிற்கு பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்து தெரிவித்திருந்தார். இந்தியா பாகிஸ்தான் உறவை மேம்படுத்துவேன் என்ற உங்களது கருத்துக்கு, இந்திய மக்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர். உங்களுடனும், உங்களது அரசுடனும் இணைந்து பணியாற்ற தாம் ஆர்வமாக உள்ளதாக கூறியிருந்தார். மேலும் நவாஸ்செரீப் இந்தியா வர வேண்டும் என அழைப்பு விடுத்திருந்தார், இந்த நிலையில் பாகிஸ்தான் பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ள நவாஸ் செரீப்பிற்கு இந்தியா வர பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்துள்ளது குறித்து பா.ஜ.க, கேள்வி எழுப்பி உள்ளது. பாகிஸ்தான் பிரதமரை இந்தியாவிற்கு அழைக்க மன்மோகன்சிங் மிகவும் அவசரப்படுவதாகவும், ஆனால் பாகிஸ்தானின் இந்தியா மீதான நிலைப்பாட்டில் என்ன மாற்றம் வரப் போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் எனவும், நற்பலன்கள் ஏற்படுமானால் அவரை அழைக்கலாம் எனவும் பா.ஜ. துணைத் தலைவர் பல்பீர் புன்ஞ் தெரிவித்துள்ளார். மேலும் நவாஸ் இன்னும் பதவியேற்பதற்கு முன் அவருக்கு இந்தியாவர அவசரமாக அழைப்பு விடுக்கப்பட்டதன் காரணம் என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பி' உள்ளார். நவாஷ் செரீப் அழைப்பு இதனிடையே தனது பதவியேற்பு விழாவில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் பிரதமராக பதவியேற்க உள்ள நவாஸ் செரீப் கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில், கார்கில், மும்பை தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தியாவுடன் நல்லுறவை மேம்படுத்த முயற்சி எடுக்கப்படும். பிரதமர் மன்மோகன் சிங், என்னுடைய பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டால் மிகவும் மகிழ்ச்சியடைவேன் என கூறினார். மன்மோகன் நிராகரிப்பு ஆனால் பதவியேற்பு விழாவில் பங்கேற்க நவாஸ் செரீப் விடுத்த அழைப்பை நிராகரித்தார் மன்மோகன் சிங். முக்கிய விவகாரம் குறித்து ஆலோசிக்க இருப்பதால் மன்மோகன் சிங் பாகிஸ்தான் செல்லவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியச் செய்திகள்



விரைவில் வெளியாக உள்ள மரியான் திரைப்படத்தின் ஒலிபேளை வெளயீட்டு விழா, சென்னையில் நடைபெற்றது, இதில் கலந்துகொண்ட அப்படத்தின் இயக்குநர் பரத்பாலா, இசையமைப்பாளர் ரஹ்மான், நடிகர் தனுஷ் மற்றும் நடிகை பார்வதி.

# ஜெயலலிதா, சோனியா பாதுகாப்புக்கு சிறப்பு பெண் கொமாண்டோக்கள்



உயர் அதிகாரிகளின் பாதுகாப்பை சிறப்புப் பாதுகாப்பு படையைச் சேர்ந்த கொமாண்டோ வீரர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இவர்களில் தற்போது 35 பெண் கொமாண்டோக்களே உள்ளனர். இவர்கள் முதல் அமைச்சர் ஜெயலலிதா, உத்தர பிரதேச முன்னாள் முதல்மந்திரி மாயாவதி பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.


நாடாளுமன்றத்துக்கு விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளதால் வி.வி.ஐ. பி.க்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி சமீபத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அப்போது சோனியா மற்றும் பிரியங்கா ஆகிய இருவருக்கும் பாதுகாப்பை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது. மேலும் சோனியா, பிரியங்காவுக்கு பெண் கொமாண்டோக்களை பாதுகாப்பாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.

இதையடுத்து அவர்களுக்கான பெண்கள் பாதுகாப்பு படையை உருவாக்கும் ஏற்பாடுகள் நடந்து வருகிறது. மத்திய தொழில் பாதுகாப்புப் படையில் இருந்து இதற்கான பெண்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். தற்போது மத்திய தொழில் பாதுகாப்புப் படையில் 5 ஆயிரம் பெண்கள் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் நாடெங்கும் உள்ள விமான நிலையங்களிலும் டில்லி மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் பாதுகாப்பு பணியில் உள்ளனர். இவர்களில் விருப்பம் உள்ளவர்கள் தேசிய பாதுகாப்புப் படைக்கு வரலாம் என்று அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. 35 வயதுக்குட்பட்ட பெண்களே இந்த பணிக்கு தேர்வு செய்யப்பட உள்ளனர்.

பிறகு அவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படும். அதன் பிறகு அவர்கள் சோனியா, பிரியங்காவின் பாதுகாப்பு பொறுப்பை ஏற்பார்கள்.

# சச்சினின் உருவம் பதித்த தங்கக்காசுகள் வெளியீடு



அட்சய திருதியை முன்னிட்டு நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சினின் உருவம் பதித்த தங்கக் காசுகள் மும்பையில் வெளியிடப்பட்டன. வேல்யூமார்ட் கோல்ட் மற்றும் ஜவல்ஸ் என்ற நிறுவனம் இந்த தங்கக் காசுகளை விற்பனைக்கு விட்டுள்ளது. ஒவ்வொரு காசும் 10 கிராம் எடை கொண்டதாகும்.

இந்தத் தங்கக் காசில் சச்சின் முகத்துடன் அவரது ஆட்டோகிராபும் இடம் பெற்றிருப்பது விசேஷமாகும்.

மொத்தம் ஒரு இலட்சம் தங்கக் காசுகள் முதல் கட்டமாக விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. மும்பையில் நடந்த விழாவில், சச்சின் முன்னிலையில் இந்த தங்கக் காசுகள் வெளியிடப்பட்டன.

மேலும் வேல்யூ மார்ட் நிறுவனத்தின் பிராண்ட் அம்பாசடராகவும் சச்சின் நியமிக்கப்பட்டுள்ளார். 3 ஆண்டுகளுக்கு அவர் இப்பொறுப்பில் இருப்பார். நிகழ்ச்சியில் சச்சின் பேசுகையில்,பல தங்கமான நினைவுகள் எனக்கு கிரிக்கெட் களத்தில் கிடைத்துள்ளன. அவையெல்லாம் அபாரமானவை, அரியவை. அட்சய திருதியை தினமானது அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வர உதவும். தங்கத்தைப் பார்த்தால் எனக்கே தங்கம் வாங்க வேண்டும் போல இருக்கிறது. சின்னதாக ஒரு தங்கச் சங்கிலியை கழுத்தில் போட்டுக் கொள்ள ஆசை வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் பதவியில் தொடர்ந்தும் மன்மோகன்

பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இடையே கருத்து வேறுபாடு இல்லை. இருவருக்கும் இடையே நல்ல நட்புறவு உள்ளது.

இருவருக்கும் கருத்து வேறுபாடு உள்ளது என்று வெளியான செய்தி வதந்தி என்று காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் ஜனார்த்தன துவிவேதி கூறியுள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியதாவது,

2014 மே வரை மன்மோகன் சிங்கே பிரதமர் பதவியில் தொடருவார் என்றும், 2014 இற்கு பிறகும் மன்மோகன் சிங் பிரதமராக நீடிப்பார் என்றும் தெரிவித்தார். நிலக்கரி ஊழல் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக பிரதமரை பதவி விலகுமாறு பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தன.மத்திய அமைச்சர்கள் பதவியில் இருந்து அஸ்வினிகுமார், பவன்குமார் பன்சால் ஆகியோர் விலகியதில் மன்மோகன் சிங்குக்கும் சோனியாவுக்கும் கருத்து வேறுபாடு இருந்ததாக கூறப்பட்டது.இதுதொடர்பான கேள்விக்கு ஜனார்த்தன துவிவேதி மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

# ஏழைகளுக்கு புதிய நலத்திட்டம் அறிவித்தார் கர்நாடக முதல்வர்



கர்நாடக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 121 தொகுதிகளில் அமோக வெற்றி பெற்று அதிக பெரும்பான்மையுடன் 7 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சியை பிடித்தது. பெங்களூரில் உள்ள கண்டீரவா மைதானத்தில் நடைபெற்ற பிரமாண்டமான விழாவில் சித்தராமையா முதல்மந்திரியாக பதவி ஏற்றுக் கொண்டார். அவருக்கு கவர்னர் பரத்வாஜ் ப்தவி பிரமாணமும், இரகசிய காப்பு பிரமாண்மும் செய்து வைத்தார்.

இதையடுத்து தனது அலுவலகத்திற்குச் சென்று பணிகளைத் தொடங்கிய முதல்வர் சித்தராமையா, முதல் நாளில் ரூ.4409.81 கோடியில் நலத்திட்டங்களை அறிவித்தார். வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் 98.17 மக்களுக்கு அடுத்த மாதம் முதல் கிலோ ஒரு ரூபாய் விலையில் மாதந்தோறும் 30 கிலோ அரிசி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 460 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். பால் உற்பத்தியாளர்களுக்கான மானியம், ஒரு லிற்றருக்கு 2 ரூபாயிலிருந்து, 4 ரூபாயாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 7.5 இலட்சம் பேர் பயனடைவார்கள். அரசுக்கு ரூ.496 கோடி கூடுதல் செலவாகும்.

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் ஏழைகளுக்கான வீடுகட்டும் திட்டமானியம் ரூ.1.2 இலட்சம் ஆக உயர்த்தப்படுகிறது. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



தமிழ் – சிங்களப் புதுவருடத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலை கைதிகளுக்கிடையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் யாழ்.சிறைச்சாலையினரால் நடாத்தப்பட்டது. சிறப்புற நடைபெற்ற நிகழ்வில் தலையணைச்சண்டை, சங்கீதக் கதிரை போன்ற பல போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இப்போட்டி நிகழ்வில் தலையணைச் சண்டை, சங்கீதக் கதிரை நிகழ்வில் போட்டியாளர்கள் ஈடுபடுவதையும, நீதிபதிகள், நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் இருப்பதையும் காணலாம். (படப்பிடிப்பு: ஆர். இராஜகுமார்)

# சிறப்புற நடைபெற்ற

## தெல்லிப்பளை பிரதேச புத்தாண்டு விளையாட்டு





(மல்லாகம்)

தெல்லிப்பளை பொலிஸாரும் தெல்லிப்பளை பிரதேச செயலகம் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுவும் இணைந்து நடாத்திய புத்தாண்டு விளை யாட்டுப் போட்டி வெகுசிறப்பாக நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற் றுக்கிழமை காலை 7.00 மணி முதல் மாலைவரை நடைபெற்றது.

காலையில் ஆண்கள் பெண்களுக்கான சைக் கிள் ஓட்டப் போட்டிகள், மரதன் ஓட்டப் போட்டிகள் மற்றும் ஆண்கள் பெண்களுக்கான கிராமிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன.

கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், கிறிஸ் மரம் ஏறுதல், முட்டி உடைத்தல் என பல்வேறு விளையாட்டுக்களும் இடம்பெற்றன.

மூன்றாவது ஆண்டாக கொண்டாடப்படும் இப்புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் தெல் லிப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்சி தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்சியில் தெல்லிப்பளை பிரதேச செயலா- ளர் எஸ்.ஸஸ்ரீமோகன், தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரன், மல்லாகம் மகா வித்தியாலய அதிபர் என்.சுப்பிர மணியம் உட்பட மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (93)

# தேசிய மட்ட வலைப்பந்தாட்டம் இறுதியில் யாழ். மாவட்டம்

(மகரகம)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்டதேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்று அசத்தியுள்ளது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட,தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் அரையிறுதி வரையான ஆட்டங்கள் கடந்த சனி, ஞாயிற்று தினங்களில் மகரகம தேசிய இளைஞர் சேவை மன்ற விளையாட்டு மைதா னத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான முதலாவது போட்டியில் அம்பாந்தோட்டை மாவட்ட அணியுடன் யாழ். மாவட்ட அணி மோதியது. ஆரம்பம் முதலே அசத்திய யாழ். மாவட்ட அணி 17-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இரத்தினபுரி மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. மிகவேக மாக முறையில் செயற்பட்டு ஆரம்பம் முதலே யாழ். மாவட்ட அணி புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவண்ணமிருந்தது. இறுதி யில் 23-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

அரையிறுதிப் போட்டியில் பதுளை மாவட்ட அணி யும், யாழ். மாவட்ட இளைஞர் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட இப்போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் அணி சிறப்பான புள்ளிகளைப் பெற்று இலகுவாக வெற்றி பெற்றது. இறுதியில் யாழ். மாவட்ட இளைஞர் அணி 18-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதேவேளை இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், கேகாலை மாவட்ட அணியும் மோதவுள்ளன என் றும், இறுதிப் போட்டி யூலை மாதம் பொலநறுவையில் நடைபெறவுள்ள தேசிய இளைஞர்களுக்கான தடகளப் போட்டியின் இறுதி நாளன்று நடை பெறும் என்றும் போட்டி அமைப் பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இறுதிப் போட்டியில் கிண்ணம் வெல்ல போராடுவோம். வலுவான அணி எம்மிடம் உள்ளது என யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணிக் கப்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(93)

## விளையாட்டுச் செய்திகள்

# கிண்ணம் வென்றது கொட்டடி இளங்கதிர்

(கோண்டாவில்)

இசாமின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கொட்டடி இளங்கதிர் அணி கிண்ணத் தைக் கைப்பற்றிக் கொண்டது.

கோண்டாவில் கலைவாணி சனசமூக நிலை யம் நடாத்திய அணிக்குஒன்பது பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடர் அண்மையில் கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பல அணிகள் பங்குகொண்டபோதும் இறுதிப் போட்டியில் சுன்னாகம் காந்தி நியூ ஸ்ரார் அணியும், கொட்டடி இளங்கதிர் அணி யும் மோதின.

இறுதிப் போட்டி 12 ஓவர்களைக் கொண்டதாக நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய காந்தி நியூஸ்ரார் அணி 11.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 52 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இளங்கதிர் அணி ஒன்பது ஓவர்கள் நிறைவில் இரண்டு விக் கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்து கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண் டது. இதில் இசாம் 25 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக இளங்கதிர் அணியைச் சேர்ந்த இசாம், தொடர் நாயக னாக அதே அணியைச் சேர்ந்த ஜெயமயூரன் தெரிவானார்கள்.



யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கால்பந்துத் தொடரின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற யாழ். மத்திய கல்லூரி அணியைக் காணலாம். சென். ஜோண்ஸ் கல்லூரி அணியை் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# பெண்களிடம் சொல்ல வேண்டியவை...

- ஜெயமோகன் -

தமிழ்ச்சமூகத்தில் பெண்களுக்கெதிரான மனநிலைகள் அதிகம். வன்முறை நிறைந்த ஒடுக்குமுறை என்றும் உள்ளது. கல்வியும் நாகரிகமும் அதை சிறிதளவே மாற்றியிருக்கின்றன. இன்னும் செல்லவேண்டிய தொலைவு அதிகம். அரசியல் சித்தாந்தம் பேசக்கூடியவர்கள் தங்களைப் பெண்களுக்கு எதிரான மனநிலைகளில் இருந்து மேலே சென்றுவிட்டவர்கள் என்பார்கள். மரபையும் மதத்தையும் குறைசொல்வார்கள். ஆனால் தனிவாழ்க்கையில் அவர்களே மோசமான ஆணாதிக்கவாதிகளாக இருப்பார்கள். இதெல்லாம் உண்மை.



ஆனால், இந்த மனநிலையின் காரணமாக உள்ள பின்புலத்தை நாம் ஆராயவேண்டும். நம் சமூகம் உருவாகிவந்த பரிணாமத்தின் விளைவாகவே இந்த மனநிலைகளும் உருவாகிவந்துள்ளன. அதாவது இந்துப்பண்பாடு என்றும் தமிழ்ப்பண்பாடு என்றும் நாம் எவற்றையெல்லாம் சொல்கிறோமோ அவற்றையெல்லாம் உருவாக்கிய வரலாற்றுப்பரிணாமமே இந்த ஆணாதிக்க மனநிலைகளையும் உருவாக்கியிருக்கிறது. ஒரு காலத்தில் அதற்கான தேவை இருந்திருக்கலாம். அன்றைய தங்கிவாழ்தலுக்கு அது உதவியிருக்கலாம். இல்லாமல் இந்த அளவுக்கு வேரூன்றி நீடித்திருக்காது.

பழங்குடிக்காலம் கொடும் போர்களின் காலம். அதிலிருந்து நிலப்பிரபுத்துவத்துக்கு வந்த காலகட்டத்தின் ஆவணங்கள் தமிழ் சங்கப்பாடல்கள். புறநானூறு உக்கிரமான போர்களைச் சித்தரிக்கிறது. எந்தவித அடிப்படை அறமும் கையாளப்படாத மூர்க்கமான போர்கள். எதிரிகளின் ஊர்களை எரித்து அழித்தல். அவர்களின் குடிநீர் ஊற்றுகளை யானையை விட்டு அழித்தல். எதிரிமன்னர்களைக் கொன்று தலையையும் பல்லையும் கொண்டுவந்து நினைவுச்சின்னமாகப் பாதுகாத்தல். அத்தகைய சமூகத்தில் ஆண் போர்புரிபவனாகவும் பெண் வம்சத்தை வளர்ப்பவளாகவும் இனம்பிரிக்கப்பட்டார்கள். பெண்களைக் கொல்வது கூடுமானவரை தவிர்க்கப்பட்டது.

ஆகவே, பெண் பாதுகாக்கப்படவேண்டியவள் ஆனாள். ஒரு செல்வமாக மாறினாள். அதனாலேயே கவர்ந்து செல்வதும் நடந்தது. பெண்ணுக்கான போர்களை நாம் எல்லா நிலப்பிரபுத்துவப் பண்பாடுகளிலும் காண்கிறோம். பெண்ணை ஆண் தன் உடைமையாகக் கருதுவதும் அவளுடைய பாதுகாப்பு தன்னிடம் என நினைப்பதும் இந்த வரலாற்றுப்பின்புலம் உடைய மனநிலைகள். அதே மனநிலையின் மறுபக்கம்தான் தன்னுடையவள் அல்லாத பெண்ணை சீண்டுவதும் அடைய நினைப்பதும் எல்லாம். பிற பெண்களிடம் எந்த எல்லைக்கும் இறங்கி நடந்துகொள்ளும் சராசரி தமிழ் ஆண், தன்னைச்சேர்ந்த பெண்களிடம் அப்படி ஓர் அன்னியன் நடந்து கொண்டால் கொந்தளித்தெழுவதை இன்றும் காணலாம்.

நம் குடும்பத்தில், அலுவலகத்தில் ஆண்களிடம் பெண்கள் காணும் மனநிலை என்பது இந்த இருபாற்பட்ட தன்மை கொண்டது. தன்னைப் பாதுகாவலனாக நினைப்பார்கள். ஆகவே பெண்ணைப் பாதுகாக்கப்படவேண்டிய பலவீனர்களாகக் கருதுவார்கள். அதேபோலத் தன் பாதுகாப்புக்குள் வராத பெண்களை எப்போதும் தாக்கவும் வெல்லவும் முடியவில்லை என்றால் அவமதிக்கவும் முனைவார்கள். ஒட்டுமொத்த ஆண்மனநிலையை இந்த நடவடிக்கைகளுக்குள் சுருக்கிவிடலாம்,

இன்று, ஜனநாயக யுகத்தில் இம்மனநிலை அதன் முந்தையகாலப் பயன்பாட்டை இழந்துவிட்டது. பொருத்தமற்ற புராதன விஷயமாக மாறிவிட்டது. இன்று பெண்களின் தற்சார்பையும் சுயமரியாதையையும் தடுக்கும் சக்தியாக இது மாறிவிட்டிருக்கிறது. பெண்கள் எதிர்த்துப்போராடி வென்றாகவேண்டிய ஒன்று ஆணிடம் உள்ள இம்மனநிலை.

ஆனால் இதற்கு மறுபக்கம் ஒன்றுண்டு. ஆணிடம் மேலே சொன்ன மனநிலையை உருவாக்கிய அதே மரபுதான் இங்கே பெண்ணிடம் அதற்கு இசைவான சில மனநிலைகளை உருவாக்கியிருக்கிறது. புறவாழ்க்கையில் எதற்கும் பொறுப்பேற்கத் தயங்குவது, தன்னுடைய சொந்தபலத்தை நம்பி நிற்க முயலாமல் இருப்பது போன்ற மனநிலைகள் பெண்களுடையவையாக உருவாகி வந்துள்ளன.

அதாவது ஆண் தன்னை பாதுகாப்பாளன், பலசாலி என்று பாவனைசெய்வதை இயல்பான மனநிலையாகக் கொண்டிருப்பதைப் போலவேதான் பாதுகாக்கப்பட வேண்டியவள், அபலை என்ற பாவனையைப் பெண்ணும் இயல்பாகக் கொண்டிருக்கிறாள். ஆண் பெண்ணைப் பாதுகாக்கவும் தாக்கவும் முயல்வதைப்போலவே பெண் அடைக்கலம் புகவும் ஆணைப் பயன்படுத்திக்கொள்ளவும் பழகியிருக்கிறாள்.

பொதுவெளிக்கு வரும் பெண்கள் இன்று சந்தித்து வெல்லவேண்டிய முக்கியமான சிக்கல் அவர்களிடம் உள்ள இந்த மரபார்ந்த மனநிலைகள்தான். எப்படி ஆண் தன்னுள் உறையும் நிலப்பிரபுத்துவகால மனநிலைகளுக்கு எதிராகப் போராட வேண்டுமோ அதேபோல பெண்ணும் போராடியாகவேண்டும்.

ஒருபெண் தன்னுள் உறையும் அந்த நிலப்பிரபுத்துவ மனநிலைகளை வென்றுவிட்டாளென்றால் அக்கணமே அவள் விடுதலை பெற்றுவிடுகிறாள். அதன்பின் நிலப்பிரபுத்துவகால மனநிலைகளை சுமத்தலையும் ஆண்களின் பேச்சும் செயற்பாடுகளும் அவளுக்கு ஒரு பொருட்டே அல்ல. அவள் மேலே சென்றுவிட்டவள். அவர்கள் அவள் காலுக்குக் கீழே ஊர்ந்துகொண்டிருக்கக் காண்பாள்.

நான் என் மகளிடம் சொல்பவை இவை. அவற்றையே எந்த நவீனகாலப் பெண்ணிடமும் சொல்வேன்.

# துல்லியமாய்க் கேட்கும் காது!

மனித காதுகளுக்கு எட்டாத சில அலைவரிசை ஒலிகளைக் கேட்கும் சக்தி வாய்ந்த ஒரு செயற்கைக் காதை பிரின்ஸ்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

வெள்ளி நனோ துகள்களைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு சின்னஞ்சிறு அன்ரெனா இதன் அடிப்படை என்றாலும் கன்றின் உயிரணுக்கள், பொலிமர் பிசின் ஆகியவற்றினால் ஒரு காது உருவத்தில் இதனை அமைத்திருப்பது புரட்சிகரமானது.



வாழும் உயிரணுக்கள் கொண்டு இது போன்ற செயற்கையான கருவிகளை உருவாக்குவது சாதாரணமான விஷயமல்ல.

மனித காதுகளுக்கு எட்டாத அதிநுட்பமான ஒலிகளை இதன் மூலம் பெற முடியும். அதே சமயத்தில் இதில் உபரியாக சேர்க்கப்பட்டுள்ள மற்றொரு பகுதி மூலம் சாதாரண மனித காதுகள் கேட்கும் இசை போன்ற சமாசாரங்களையும் கேட்க முடியும்.

கேட்கும் திறன் குறைபாடு உள்ளவர்கள் இதனைப் பயன்படுத்த முடியுமா என்றால் முடியாது என்றுதான் இதை உருவாக்கியவர்கள் சொல்கிறார்கள். கருத்தளவில் இது சாத்தியம் என்றாலும் பிற உடல் உறுப்புகளை மருத்துவ ரீதியாக மாற்றிப் பொருத்துவது போல இதை ஒரு மாற்றுக் காதாக உருவாக்கும் உத்தேசம் இந்த விஞ்ஞானிகளுக்கு உடனடியாக இல்லை.

மனித இயந்திரங்கள் உருவாவதற்கு முன்னோடியாக இதை எடுத்துக் கொள்ளலாம். அது போன்ற இயந்திரங்கள் உருவாகும் முன்பே அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்றும் சொல்லலாம். மனித உடல்களில் காதின் செயற்பாடு மிக நுட்பமானது. அதை உருவாக்குவதில் வெற்றி கண்டிருக்கிறோம். தேவைக்கேற்ப மனித உடல் உறுப்புகளை தயாரிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

எலக்ட்ரோனிக் சாதனங்கள் கடினமான பொருள்களால் உருவாக்கப்படுகின்றன. ஆனால் உயிரியல் சாதனங்கள் மென்மையாகவும் வளையக் கூடியதாகவும் இருக்கின்றன. இவற்றை இணைத்து ஒரு உயர் திறன் கொண்ட பொருளை உருவாக்குவது பெரிய சவால். அந்த வகையில் இதை முயற்சி செய்திருக்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இதே ரீதியில் செயற்கை கண்களை உருவாக்குவதில் வேறு சிலர் முயன்று வருவதும் குறிப்பிடத்தக்கது.




# பாஷன் ஷோ சர்ச்சை!

இங்கிலாந்தில் குழந்தைகளை வைத்து நடத்தப்பட்ட ஒரு ஃபாஷன் ஷோ பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்தைச் சேர்ந்த, குழந்தைகளுக்கான உடைகளை தயாரிக்கும், பிரபலமான ரெடிமேட் நிறுவனம் சமீபத்தில், லண்டனில் இந்த வித்தியாசமான ஃபாஷன் ஷோவை நடாத்தியது. சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு, அரைகுறை உடைகளை அணிவித்து, அழகுநடை, நடனம், பேச்சு போன்ற பல்வேறு போட்டிகளை நடத்தினர். இதில், சிறப்பாகச் செயற்பட்ட குழந்தைகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்தக் குழந்தைகள் ஃபாஷன் ஷோவுக்கு, மனித உரிமை ஆர்வலர்களும், சமூக நலன் விரும்பிகளும், கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். "தங்களின் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு, குழந்தைகளைப் பகடைக் காய்களாக பயன்படுத்துவதுடன், அவர்களுக்கு அரைகுறை ஆடைகளை அணிவித்து, பிஞ்சு மனதில், நஞ்சை விதைப்பதா?" என, அந்த அமைப்பினர், கண்டனம் தெரிவித்துள்ளதால், குழந்தைகள் ஃபாஷன் ஷோ, சர்ச்சையில் சிக்கியுள்ளது.

இயக்குநர் விஜய்க்கும் எனக்கும் காதலா என்று கேட்கிறார்கள். இதற்கு நிறைய முறை பதில் சொல்லி விட்டேன். இருந்தும் இந்தக் கேள்வி பின் தொடர்கிறது. அப்படி எதுவும் இல்லை. சினிமாவைத் தாண்டி இன்னும் என்னை யாரும் கவரவில்லை. இதுதான் உண்மை!

- அமலா பால்.

என் இரசிகர்கள் யாரும், எனக்காக கட் - அவுட், பேனர்கள் வைத்து, தங்களது சொந்தப் பணத்தை வீணடிக்க வேண்டாம்... அப்படி நீங்கள் எனக்காக வீணடிக்கிற பணத்தை வறுமையில் வாடும் ஏழைகளுக்கு கொடுத்தால், உண்மையில் நான் மிகவும் சந்தோஷப்படுவேன்...

- அஜித்



# சொன்னார்கள்...

சமூக வலைத் தளங்களில் என் இரசிகர்கள், மற்ற இசையமைப்பாளர்களின் "இரசிகர்ளோடு மோதிக் கொள்வதை அறிந்து வருத்தப்படுகிறேன். யாருக்கு யாரும் எதிரியில்லை. எல்லோருமே நட்புடன்தான் இருந்து வருகிறோம். எனக்கு யாரி டமும், எந்த ஈகோவும் கிடையாது. "மரியான்" படத்துக்காக ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் பாடியது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த நட்பு எல்லா இசையமைப்பாளர்களுடனும் தொடரும். என் இசை இரசிகர்களும் அப்படித்தான் இருக்க வேண்டும்.

- யுவன் ஷங்கர் ராஜா.

பத்தாம் வகுப்பு பரீட்சை எழுதியுள்ளேன். பாஸ ாகி விடுவேன். நடிப்பு, படிப்பு இரண்டையும் தொடர்வதோடு, எதிர்காலத்தில், ஐ.ஏ.எஸ். படிக்க வேண்டும், கலெக்டராக வேண்டும் என்பது என் பெரிய கனவு.

- லட்சுமி மேனன்

"அன்னயும் ரசூலும்" படம் என் நடிப்பு வாழ்க்கையில் முக்கியமானது. இந்தப் படத்தில் நடித்த போது என்னுடன் கூட நடித்த ஆண்ட்ரி யாவை உண்மையில் நான் காதலிப்பதாக உணர முடிந்தது.

- இயக்குநர் பாசிலின் மகன் பஹத்

காதல், கல்யாணம் பற்றி நிறைய பேர் கேட்கிறார்கள். இந்த இரண்டுக்கும் என்னிடம் பதில் இல்லை. அந்த வாழ்க்கையில் நம்பிக்கை வர வேண்டும். யாரையும் ஏமாற்றக் கூடாது. உண்மையில் கல்யாண வாழ்க்கையில் எனக்கு நம்பிக்கை இல்லை.

- ஆண்ட்ரியா

என் தம்பி சுரேஷ் நாயருடன் இணைந்து நான் இயக்கியுள்ள படம், "நிழல்". எனக்கு டைரக்ஷன் கனவு இருந்தது. இப்போது அந்தக் கனவு நிறைவேறிவிட்டது. படம் இயக்குவதை விட, நடிப்பதுதான் சுலபம். நான் பல இயக்குநர்களிடம் பணியாற்றியிருக்கிறேன். யாரும் என்னைத் திட்டியது கூட இல்லை.

- அம்பிகா

நான் நடித்த படங்களின் வெற்றி நான் எதிர்பாராதது. சிறப்பான இந்தக் கதைகளை நான் தேர்ந்தெடுத்ததுதான் வெற்றிக்குக் காரணம் என்று சொல்வதை ஏற்கமாட்டேன். என் பங்கு ஐந்து சதவிகிதம் வேண்டுமானால் இருக்குலாம். வெற்றிக்கு அந்தந்தப் பட இயக்குநர்களின் உழைப்புதான் காரணம். ஹீரோவாக நடிக்கவேண்டும் என்று நான் ஆசைப்பட்டது இல்லை. குணச்சித்திர நடிகராக வேண்டும் என்றுதான். நினைத்தேன். இப்போது ஹீரோவாக நடித்துக் கொண்டிருப்பது நானே எதிர்பாராதது.

- விஜய் சேதுபதி

என் அம்மா சமஸ்கிருத டீச்சர். கண்டிப்பானவர். ஒருவரின் சிறுவயது நினைவு என்றவுடன் அவரது அம்மா பாட்டுப் பாடி, சோறு ஊட்டியதுதான் ஞாபகத்துக்கு வரும். ஆனால் என் அம்மாவைப் பற்றி நான் நினைக்கும்போது அவரிடம் துடைப்பத்தால் அடிவாங்கியதுதான் ஞாபகத்தில் இருக்கிறது. அவர் இவ்வளவு கடுமையாக நடந்துகொண்டதற்குக் காரணம் என்னை நல்ல முறையில் வளர்ப்பதற்காகத்தான். எல்லாவற்றிலும் எனக்குப் பயிற்சி அளித்தார். பாத்திரம் துலக்குவது முதல் சமையல் செய்வதுவரை கற்றுக்கொடுத்தார். திருமணத்துக்குப் பிறகு குடும்பத்தை நடத்துவது எப்படி என்றும் கற்றுத்தந்தார்.

- கங்கனா ரணவத்

அவரவரது மார்க்கெட் நிலவரத்தைவிட அதிக மாக சம்பளம் வாங்குகிற நடிகைகள் பட்டியலில் நானே முதல் இடத்தில் இருப்பதாக 'போர்ப்ஸ் பத்திரிகை எழுதியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் ஒவ்வொருவர் நடித்த படங்கள் வசூலித்த தொகை யை அடிப்படையாக வைத்து இந்தப் பட்டியலை வெளியிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் சாதனை எனச் சொல்லலாமா என்று தெரியவில்லை.

- ஹாலிவுட் நடிகை கத்தரின் ஹெய்ல்

**04**

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

- டாக்டர். பிரகாஷ் -

**Concept # 1. Start Early:**

பச்சிளம் குழந்தைப் பருவத்திலேயே, ஏன் கர்ப்பத்தில் இருக்கும் போதே மூளை வளர்ச்சி தொடங்கி விடுகிறது.

குழந்தை வயிற்றுக்குள் இருக்கையிலேயே, அதனுடன் பேச ஆரம்பித்து விடுங்கள், நல்ல இசையை, புதிய மொழி ஒலிநாடாக்களை ஒலிக்கச் செய்யலாம்.

**Concept # 2. Make Connections:**

மூளையின் சேர்க்யூட் இணைப்பு, அது பெறும் தகவல்களுக்கேற்ப, தன்னுள் இணைப்புகளை உருவாக்குகிறது. அதிகமான தகவல்கள் = விரைவான மற்றும் அதிகமான கற்றல்

படைப்புத் திறன் மிக்க மூளையானது முதல் மூன்று வயதிற்குள்ளாகவே, எல்லாவிதமான செய்தி, அனுபவங்களைப் பெறுவதற்குத் தயாராகி விடுகிறது.

பார்ப்பதை, கேட்பதை விரைவாக ஸ்கான் செய்து, அதை வகைப்படுத்தி, அதனுடன் தொடர்புடைய விஷயத்துடன் லிங்க் செய்து, பிற்பாடு பயன்படுத்த, பத்திரப்படுத்திக் கொள்கிறது.

இந்த வயதிற்குள்ளாகவே, உங்கள் குழந்தைகளுக்கு எல்லாப் புலன்களின் மூலமாகவும் (by using flashcards, classical music, world languages, sensorial toys and games) கற்றுக் கொடுக்க முயற்சியுங்கள்

**Concept # 3. Teach Both Brains:**

இரண்டு விதமான சிந்தனைத் திறத்தையும் ஊக்குவிக்க விளையாட்டு முறைகளுடன், லொஜிக்கல் விஷயங்களை, எண்களையும் சேர்த்துக் கற்றுக் கொடுக்கவும்.

இசையைக் கற்றுக் கொள்வது இரண்டு பக்க மூளையின் செயற்பாட்டுத் திறனையும் ஊக்குவிப்பதாக சமீபத்திய ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

**Concept # 4. Maximize the Right Brain Window:**

முதல் இரண்டு வயது வரை, குழந்தைக்கு இடது மூளையின் குறுக்கீடு ஏறக்குறைய இல்லை என்றே சொல்லலாம். இந்தக் காலத்தில் வலது மூளை தனக்குக் கிடைக்கும் அனைத்துத் தகவல்களையும் இடது மூளையின் குறுக்கீடுகள் அற்று குஷியாக, தானே உள்வாங்கி, சேமித்து, பிரதிபலிக்கிறது

இரண்டு வயதிற்குள்ளாகவே, எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான Flash Cards, சித்திரப் புத்தகங்கள், கதைகளை அறிமுகப்படுத்த முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு அதன் வலது மூளையின் செயற்திறனை நன்கு ஊக்குவிக்கலாம். மூன்று வயதுக்குப் பின், வெவ்வேறு விதமான விளையாட்டுகளின் மூலம் வலது மூளையின் திறனை வளர்க்கலாம்.

**Concept # 5. Be Happy:**

**A happy child becomes happy adult** என்பர். குழந்தைகளுக்கு, அவர்களின் எல்லா புலன்களையும் பயன்படுத்தக் கற்றுக் கொடுங்கள். உங்கள் செயற்பாடுகள் மூலம், அமைதி, அன்பு, அரவணைப்பு போன்ற உணர்ச்சிகளையும் அவர்கள் உணர்ந்து கொள்ளுமாறு பழகுங்கள். கதை களினூடே மேற்கூறிய உணர்ச்சிகளையும் மற்ற உணர்ச்சிகளையும் அவர் களுக்குப் பயிற்றுவிப்பது எளிது.

தினமும் ஒரு இருபது நிமிடங்களாவது உங்கள் குழந்தையை வெளியே பூங்கா, கடைவீதி, பஸ் நிலையம் போன்ற புதிய இடங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள். நினைவிருக்கட்டும்-ஒவ்வொரு புதிய பொருளை, இடத்தைப் பார்க்கையிலும் அதன் மூளை யில் புதிய புதிய சேர்க்யூட்கள் உருவாகின்றன.

குழந்தைகளுக்கு, நீங்கள் என்ன செய்கிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள் என்று சொல்லிக் கொண்டே, பேசிக் கொண்டே இருக்கவும். அம்மா, இப்போ சோச்சி செய்யப் போறேன், சோச்சி செஞ்ச உடனே அவள் சாப்பிடுவாளாம்.... பெல் அடிக்குது, யார் வந்திருக்கிறாங்க என்று பாக்கலாமா?... என்று நீங்கள் செய்யும் ஒவ்வொரு சாதாரண விஷயத்தையும் குழந்தையிடம் தெரிவித்துக் கொண்டே செய்யுங்கள்.



(தொடரும்)

# சதயம்: குற்றமும் தூக்குத்தண்டனையும்

– அபிலாஷ் சந்திரன்




எம்.டி வாசுதேவன் நாயர் ஒரு முக்கியமான நாவலாசிரியரும் வெற்றி பெற்ற திரைக்கதையாளரும் கூட. மலையாளத்தின் பொற்கால நடு-நிலைப் படங்களில் சிறந்த ஒன்றான "சதயம்" அவரது திரைக்கதையில் உருவானது. 92 இல் அவருக்கு தேசிய விருது பெற்றுத் தந்தது. மோகன்லாலின் நுட்பமான நடிப்பும் சிபி மலயிலின் கூர்மையான இயக்குமும் கூடுதல் பலங்கள். படம் தூக்குத்தண்டனையைப் பற்றியது.

தூக்குத்தண்டனை எப்போதும் உணர்ச்சிகரமான நிலைப்பாடுகளை நோக்கித் தள்ளுவது. நம் இதயம் கொடும் குற்றவாளிகளையும் தேசத்து ரோகிகளையும் கொல்லும் தீர்ப்பையே ஆதரிக்கும். மூளை அதை மறுக்கும். அப்படியான சூழலில் ஒரு கலைப் படைப்புத் தான் மக்களுக்கு துக்குத் தண்டனையின் பல்வேறு சிக்கல்களை புரிய வைக்க முடியும். விநோதமாக அப்படி ஒரு படம் 92இல் தான் வந்தது: "சதயம்". பிறகு தமிழிலோ ஹிந்தியிலோ சமீபத்தில் வரவில்லை. கமலின் "விருமாண்டி", வசந்தபாலனின் "அரவான்" போன்ற படங்கள் துக்குத் தண்டனையின் அறம் பற்றின கேள்விகளை எழுப்பவில்லை. அவை ஒரு செண்டிமெண்டுக்காக மட்டுமே இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டன. "சதயம்" இதைப் பற்றியது என்று குறிப்பாக கூறுவது ஒரு அநியாயம் தான். அது பல்வேறு விசயங்களை துருத்தாமற் பேசுகிறது. படத்தின் நோக்கங்களை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று அது குற்றவாளியின் மன நிலையை அலசுகிறது. ஒருவன் ஏன் கொலைக் குற்றம் செய்ய தூண்டப் படுகிறான்? இந்தக் கேள்வியை



எம்.டி.வாசுதேவன் நாயர்

எம்.டி.வாசுதேவன் அநாயசமாக கையாண்டிருக்கிறார். அடுத்த நோக்கம் தூக்குத்தண்டனைக்கு உள்ளாகும் அக்குற்றவாளி அனுபவிக்கும் மனவதை, அவனது தடுமாற்றங்கள், மனச்சிதைவு, இறுதியான மனமாற்றம் ஆகியவற்றை சித்தரிப்பது.

மோகன் லாலின் பாத்திரமான சத்யன் சிறுவனாக அறிமுகமாகும் காட்சி முக்கியமானது. அவன் தனியாக கடற்கரையில் மணற்சிற்பம் செய்து கொண்டிருக்கிறான். ஒரு பாதிரியார் அங்கு புகைப்படம் எடுக்க வருகிறார். அவர் மணற்சிற்பத்தால் கவரப்பட்டு புகைப்படம் எடுக்க முயல, அதற்குள் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் சில சிறுவர்கள் சிற்பத்தை உடைத்து விடுகிறார்கள். சத்யன் கோபத்தில் அவர்களில் ஒரு-வனைப் பிடித்து ஒரு மரக்கட்டையால் அடிக்கிறான். பாதிரியார் அவனைத் தடுக்கிறார். ஏன் இவ்வளவு வன்மத்தோடு இருக்கிறாய் என வினவுகிறார். அவனது அம்மா ஒரு விபச்சாரி. அப்பா இல்லை. தன்னை எல்லோரும் அவமானப்படுத்துவதாய் புகார் கூறுகி-றான். அந்த சிற்பம் அவனது கனவுல-கம். அவன் அங்கு சென்று தப்பித்துக் கொள்கிறான். ஆனால் உலகம் அவன் கனவை அடிக்கடி கலைக்கிறது. அவனை மேலும் மேலும் அற்பமாக உணரவைக்கிறது. அவனுக்கு எல்லோரையும் கொல்லும் வெறி ஏற்படுகிறது.

இப்படித் தான் சத்யனின் பாத்திரம் நிறுவப்படுகிறது.

குற்றம் செய்பவர்கள் உலகின் மீது கொள்ளும் வெறுப்பு, தம்மீதுள்ள வெறுப்பின் பிரதிபலிப்புதான். தம்மிடம் இருந்து தப்பித்து புது அடையாளத்தை, இலட்சியத்தை, விழுமியங்களை கட்டமைக்கப் பார்க்கிறார்கள். அதை உலகம் அனுமதிக்காத போது எதிரிகளை அழிப்பதன் மூலம்தன் இடத்தை புதிதாக உருவாக்க முனைகிறார்கள். சத்யனுக்கு தன்னுடைய அவமானகரமான வாழ்வு பிடிக்கவில்லை. பாதிரியாரின் பாதிப்பில் இதை பாவம் என அடையாளப்படுத்துகிறான். அவனுடைய வாழ்வின் இலட்சியமே தன் விபசார அம்மாவை மறக்க வேண்டும், தன் வாழ்வில் இருந்து அவமானங்களைத் துடைக்க வேண்டும் என்பது. இதில் சிக்கல், எல்லாப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நேர்வது போல, அவனுக்கு தன் கடந்த காலத்தை திருத்தி எழுத ஆசை தோன்றுவது. கடந்தகாலம் என்று ஒன்று இல்லை. அது நம் நினைவில் நிழலாட்டம் மட்டும் தான். அவனுக்கு இதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. அவன் வீட்டுப் பக்கத்தில் ஜெயா என்று ஒரு பெண் தனது இரு பதின்ம வயது சகோதரிகளுடன் வசிக்கிறாள். அவளுக்கு அம்மா இல்லை. சித்தியுடன் வசிக்கிறாள். விபசாரியான சித்தி அவளையும் அவ்வழிக்கு இழுக்கிறாள். ஜெயாவுக்கு அந்த இழிவில் இருந்து தப்பிக்க சத்யன் உதவத்துவங்குகிறான். அவனுக்கு இது தன் இளமையை மீளுருவாக்க ஒரு அரிய வாய்ப்பு. ஜெயாவின் சிறு சகோதரிகளை மீண்டும் பள்ளிக் கூடத்துக்கு அனுப்புகிறான். அவளுக்கு தன் நிறுவனத்தில் வேலை வாங்கித் தருகிறான். அவளைத் துன்புறுத்தும் ஒரு மாமாவை அடித்து துரத்துகிறான். எல்லாம் நன்றாக போவது போல் இருக்கிறது. சத்யனுக்கு ஜெயாவை மணக்கும் கனவும் ஏற்படுகிறது. அப்போது சத்யனின் முதலாளி அவ-ளைக் கெடுத்து விடுகிறாள். அவள் கர்ப்பமாக, இரண்டாயிரம் ரூபாயை வீசி அவளை விபசாரி போல் நடத்தி காயப்படுத்துகிறான். தொடர்ந்து அவள் வேலையை இழந்து சமூகத்தின் மீதான கோபத்திலும் அவநம்பிக்கையிலும் பணத்துக்காகவும் விபசாரியாகிறாள்.

தன் கண்முன்னே தன் இலட்சியம் பாழாவது கண்டு சத்யன் வெகுண்டெழாமல் இயல்பாக ஆவேசப்படாமல், அமைதியாக கவனிக்கிறான். அவன் தன் மனசமநிலையை இழந்து விட்டான். என்னதான் முயன்றாலும் உலகம் மீண்டும் மீண்டும் படுகுழியை நோக்கி ஒருவனைத் தள்ளுகிறது என நம்புகிறான். இதற்கு மேல் மீட்பு இல்லை. அவன் வன்முறை மூலம் உலகை தோற்கடிக்க முனைகிறான். ஜெயாவின் தங்கையான 12 வயதுப் பெண்ணை அந்த மாமா விற்பதற்கு துரத்தி வருகிறான்.

சத்யன் அவளைக் காப்பாற்றி தன் ஓவியம் தீட்டும் கத்தியால் அவளைக் கொல்லுகிறான். ஒரு படுக்கையில் தூங்குவது போல் படுக்க வைத்து போர்வையால் மூடி வைக்கிறான். பிறகு அவளது சின்ன தங்கையையும் கொன்று பக்கத்தில் படுக்க வைக்கிறான். பிறகு அவன் "இனி மேல் உங்களை யாரும் பாவ வாழ்க்கையை நோக்கித் தள்ள முடியாது. நான் அதை அனுமதிக்க முடியாது" என எக்காளத்துடன் சொல்கிறான். மனம் பிறழ்ந்து அந்த சில நிமிடங்களில் அவன் வன்முறையில் குதூகலம் அடைவ-தை மோகன் லால் அற்புதமாக சித்தரித்திருப்பார். அடுத்து அவன் தன் முதலாளியையும் அவனது நண்பனையும் கொல்லுகிறான். அவனுக்கு தூக்குத்தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால் அவன் அதை மறுப்பதில்லை. குற்றமன்னிப்பு கேட்பதில்லை. கழிவிரக்கத்துக்கு பதில் இறுமாப்பு அடைகிறான். அச்சத்துக்கு பதில் தன்னம்பிக்கை மிக்கவனாகிறான். மறுப்புவாதத்தின் இன்னொரு முனையில் போய் நிற்கும் ஒருவன் இப்படித் தான் யோசிப்பான். அவன் தன்னை பிறர் கண்டிக்க கண்டிக்க அதிகமாய் நியாயப்படுத்திக் கொண்டே போகிறான். அடுத்தவர் தன்னை நிராகரிக்கிறார் என்பதே அவனது நியாயம். அதன் மீது தான் தன் தன்னம்பிக்கையை கட்டமைக்கிறான். ஆனால் படத்தின் பிற்பாதியில் கதை மாறுகிறது. அவனுக்கு ஒவ்வொருவராய் கருணை காட்டுகிறார்கள். கருணையின் பிரகாசம் தாங்காமல் அவன் பலவீனமாகி மனம் நொறுங்குகிறான். இது அவனது மனமாற்றக் கட்டம். படத்தின் தலைப்பே இதைப் பற்றியது தான்: "கருணையுடன்"

சத்யன் தீமையில் இருந்து தப்பிக்க வைப்பதற்காக குழந்தைகளைக் கொன்றதாக கூறுகிறான். நம்மூரில் கூட பெற்றோர்கள் தற்கொலை செய்வதற்கு முன் தம் குழந்தைகளையும் கொன்று விடுவதைப் பார்க்கிறோம். சத்யனின் தவறு அவன் நியாயவானின் பாத்திரத்தை எடுக்கிறான் என்பது. காந்தியைப் போன்று சீர்திருத்தவாதிகள் பலருக்கும் நேரும் சறுக்கல் இது. இந்த உலகில் திருந்த மட்டும் அல்ல, கெட்டு சீரழியவும் மனிதனுக்கு உரிமை உண்டு. அதில் குறுக்கிட யாருக்கும் உரிமை இல்லை. அக்குழந்தைகள் எதிர்காலத்தில் எந்த கதவையும் திறக்கலாம். விபசாரியாகலாம், வேறுவிதமாகவும் ஆகலாம். அதை முடிவு செய்யும் நியாயவாதியின் ஆணவம் தான் சத்தியனை அவர்களைக் கொல்லத் தூண்டுகிறது. காந்தி இப்படித் தான் தன் ஆசிரமத்தில் காதலித்த பாவத்துக்காக ஒரு பெண்ணை மொட்டையடிக்க வைத்தார். கழிவறை அலம்ப மறுத்ததற்கு மனைவியை அடித்தார். ஆனால் அடுத்தவர் வாழ்வை கையாள்வது நம் வேலை அல்ல.

படத்தில் அழகான நுட்பமான காட்சிகள் பல இருக்கின்றன. தூக்குக் கயிற்றைச் சோதிக்க மூட்டையைக் கட்டிவிழவைக்கும் போது எழும் சத்தத்தில் சிறை அறையில் இருக்கும் சத்யன் திடுக்கிடும் காட்சி அதில் ஒன்று. அதைப் போன்றே அவன் தூக்கிலிடப்படும் முன்பு அமைதியாக நள்ளிரவில் குளிப்பது, அவனுடைய பெயரைக் கேட்டு உறுதிப்படுத்தி, மச்சம் போன்ற அடையாளங்களை சரி பார்க்கும் சடங்குகளை அதிகாரிகள் மேற்கொள்ளும் காட்சிகளும் மறக்க முடியாதவை. இது மோகன் லாலின் ஆகச்சிறந்த நடிப்பு அல்லாவிட்டாலும் அவரது சிறந்த வெளிப்பாடுகளில் ஒன்று. குறிப்பாக உடல்மொழியை சொல்ல வேண்டும். படத்தின் முதல் பாதியில் அவர் மிகுந்த பணிவும் கூச்சமும் கொண்டவர். கொலைக்கு பின் தன்னை நியாயவாதியாக நினைத்துக் கொண்டபின் ஒரு அபார தன்னம்பிக்கை அவனுக்கு வருகிறது. அப்போது ஒரு இறுமாப்பு கொண்ட உடல்மொழியை நுட்பமாக காட்டுகிறார்.

தூக்குத்தண்டனைக்கு ஆளாகும் கைதி அதற்கு முன்பே மனதளவில் பல தடவைகள் செத்து விடுகிறான். மரணத்துக்கான காத்திருப்பு அவனுக்கு எவ்வளவு கொடூரமானது என படம் வலுவாக சித்தரிக்கிறது. பிற மொழிகளில் மீண்டும் வரவேண்டிய படம்.

**சத்யன் தீமையில் இருந்து தப்பிக்க வைப்பதற்காக குழந்தைகளை கொன்றதாகக் கூறுகிறான். நம்மூரில் கூட பெற்றோர்கள் தற்கொலை செய்வதற்கு முன் தம் குழந்தைகளையும் கொன்று விடுவதை பார்க்கிறோம். சத்யனின் தவறு அவன் நியாயவானின் பாத்திரத்தை எடுக்கிறான் என்பது. காந்தியைப் போன்று சீர்திருத்தவாதிகள் பலருக்கும் நேரும் சறுக்கல் இது. இந்த உலகில் திருந்த மட்டும் அல்ல, கெட்டு சீரழியவும் மனிதனுக்கு உரிமை உண்டு. அதில் குறுக்கிட யாருக்கும் உரிமை இல்லை. காந்தி இப்படித் தான் தன் ஆசிரமத்தில் காதலித்த பாவத்துக்காக ஒரு பெண்ணை மொட்டையடிக்க வைத்தார். கழிவறை அலம்ப மறுத்ததற்கு மனைவியை அடித்தார். ஆனால் அடுத்தவர் வாழ்வை கையாள்வது நம் வேலை அல்ல.**

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயற்கை அவயவங்கள் வழங்க ஏற்பாடு

## - ஆரம்ப நிகழ்வு இன்று கிளிநொச்சியில்

(யாழ்ப்பாணம்)

சிவன்நிதியம் என்ற தனியார் தொண்டு நிறுவனம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாக யுத்தகாலத்தில் கை, கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களை பொருத்த முன்வந்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் யுத்தம் மற்றும் ஏனைய அனர்த்தங்களினால் கை, கால்களை இழந்த நிலையில் வாழ்ந்து வருவோருக்கு மேற்படி நிறுவனம் செயற்கை அவயவங்களை இலவசமாக பொருத்தி வரும் அதேவேளை, அவர்களுக்கான தொழில்வாய்ப்பு, வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது.

இந்நிலையில் யுத்தகாலத்தில் தமது கை, கால்களை இழந்து பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலானோர் வாழ்ந்து வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களை பொருத்துவதன் தேவையை நன்குணர்ந்து கொண்ட அமைச்சர் சிவன் நிதியம் (sivan foundation) என்ற நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மேற்படி செயற்திட்டத்தை வன்னிப் பகுதியிலும் முன்னெடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதன்பிரகாரம் இன்று கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் கை. கால்களை இழந்த ஆண், பெண் இருபாலாருக்கும் அவயவங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாக முன்னெடுக்கப்படவுள்ளன.

நிகழ்வில் அவயவங்களை பொருத்துவது மட்டுமல்லாது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு அமைவாக கை, கால்களை இழந்த ஆண் மற்றும் பெண்களுக்கு கைத்தொழில் மற்றும் சுயதொழில் திட்டங்களை வழங்கவும் மேற்படி நிறுவனம் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவன் நிதியம் என்ற இத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஏற்கனவே கண்டி மாவட்டத்தில் கை, கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களை பொருத்தி அவர்களுக்கான தொழில்வாய்ப்பினை வழங்கியுள்ளதுடன், அவர்களை சமூகத்தோடு இணைக்கின்ற பணியினையும் முன்னெடுத்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க சிவன்நிதியம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமானது அடுத்தடுத்த மாதங்களில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மாவட்டங்களில் இச் செயற்திட்டங்களை முன்னெடுக்கும் அதேவேளை, கிழக்கு மாகாணத்திற்கும் விரிவாக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எந்திரவியல் டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்காவில் உள்ள எந்திரதொழில்நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் , கோரப்பட்டுள்ளன.

ஜீ.சீ.ஈ(உ/த)பரீட்சையில் கணித பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். அத்துடன் விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல்வேண்டும்.

இதுதொடர்பான விபரங்களை www.iet.edu.lk என்ற இணையத் தளத்திலும் பார்வையிடலாம்.விண்ணப்பதாரிகள் இதன் விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை இல.44,சோமசுந்தரம் வீதி,சுண்டிக்குளியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் பெறலாம் என அதிகார சபையின் மாவட்ட அலுவலகர் கி.கிருஸ்ணபாலன் அறிவித்துள்ளார்.

# மனோன்மணி அம்பாளுக்கு வருடாந்த மகோற்சவம்

(வடமராட்சி)

உடுப்பிட்டி வடக்கு கொம்மந்துறை ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா நாளை வியாழக் கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் 23ஆம் திகதி இரவு சப்பறத்திருவிழாவும் 24ஆம் திகதி காலை 6 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று 10 மணிக்கு இரதோற்சவமும், 25 ஆம் திகதி காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவமும், நடைபெறவுள்ளது.

இதில் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. உற்சவ காலங்களில் தினமும் காலை 8 மணிக்கு கும்பாபிஷேகம், அபிஷேகமும் 10 மணிக்கு ஸ்தம்ப பூசையும் இடம்பெறும் மேலும் உற்சவ காலங்களில் மகேஸ்வரப் பூசை இடம்பெறும் என ஆலய தர்மகர்த்த சபையினர் அறிவித்துள்ளனர். (116)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)


HNDE,HNDIT உடற்கல்வி, மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகள் அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவன் ஸ்ரான்ஸி வீதியிலுள்ள அலுவலகத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



நெடுங்கேணி பொலிஸாரினால் நெடுங்கேணி மாறலுப்பை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட வாகன விபத்து பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான செயலமர்வில் நெடுங்கேணி பொலிஸார் இணைந்து மாணவனுக்கு கற்றல் உபகரணங்களைவழங்குவதைக் காணலாம். (40)

# ஆயுர்வேதம்

## முகத்தில் ஏற்படும் கறுப்பு உருண்டை!



தோலிலுள்ள திசுக்களை அரித்து, கட்டி மற்றும் முகப்பருக்களை ஏற்படுத்தக் கூடிய அயோடின் கலந்த உணவு வகைகளை அதிக அளவில் பயன்படுத்தக் கூடாது என்று தோல் ஆராய்ச்சி நிபுணர்கள் ஒரு கருத்தை வெளிப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. ஆனால் பலரும் அயோடின் கலந்த உப்பைப் பயன்படுத்தி நன்றாகத்தான் இருக்கிறார்கள். ஒரு சிலருக்கு வேண்டுமானால் ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். அயோடின் உப்பை நிறுத்திவிட்டால் அவர்களுக்கு இந்தப் பிரச்சினை சரியாகிவிடுகிறதா என்பதை நிதானமாக ஆராய்ந்து அறிந்து கொள்வது அவசியம்.

அதிக உடற்பயிற்சி - உடற்சூடு - ஒவ்வாமை உணவு - குடலில் சஞ்சரிக்கும் வாயு, இந்த நான்கு வகைக் காரணங்களால் உணவுப் பாதை நெடுக, உணவின் செரிமானத்துக்காக பயன்படும் கப, பித்த தோஷங்கள் தமக்கே உரிய இடம் விட்டு, ரக்தம் - மாம்ஸம் - மேதஸ் - எலும்பு - மஜ்ஜை - விந்து மற்றும் தோல் பகுதிகளுக்கு வந்துவிட்டால் அவற்றின் சீற்றத்துக்கு ஏற்றவாறு நோய்களை ஏற்படுத்துகின்றன. தோலின் அடிப்பகுதியில் அமைந்துள்ள கொழுப்புக் கோளங்களில் அவை அடைபடும்போது, தோலின் மேற்பரப்பில் பரு போன்ற கட்டிகளாகவும், சிகிச்சை செய்யாமற் போனால், கறுப்பு உருண்டைகளாகவும் மாறி உபாதைகளை ஏற்படுத்தும்.

இதுபோன்று அடைந்து கிடக்கும் கெட்டுப் போன கப - பித்த தோஷங்களை அவ்விடத்திலிருந்து உருக்கி நீர்க்கச் செய்து, எந்த வழியாகச் சென்றதோ, அதே பாதை வழியாக குடலுக்குக் கொண்டு வந்து, வாந்தி செய்வித்தோ, பேதி செய்வித்தோ வஸ்தி எனும் எனிமா சிகிச்சை மூலமாகவோ, வெளியேற்றுவது ஒன்றே சிறந்த சிகிச்சையாக ஆயுர்வேதம் கருதுகிறது. உருகிய கப பித்த தோஷங்கள் தலைப்பகுதியில் தங்கினால், நஸ்யம் எனும் மூக்கில் மருந்துவிட்டு வெளியேற்றும் சிகிச்சை சிறந்ததெனக் கூறலாம். குடலுக்கு மறுபடியும் வந்து சேர்ந்த தோஷங்களை வெளியேற்றாமல், அவற்றை உடலின் உட்புறத்திலேயே அடக்கம் செய்துவிடலாம் என்று எண்ணி சிகிச்சை செய்தால், அவைதாம் மறுபடியும் சீற்றமடையச் செய்யும் காரணத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும். தகுந்த காரணம் கிடைத்துவிட்டால், மறுபடியும் கிளர்ச்சியுற்று உடலின் மிகவும் ஆழமான பகுதிகளாகிய நரம்பு மண்டலப் பகுதிக்குச் சென்றுவிட்டால், கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும். ஆகையால் ஒரு நோயை ஏற்படுத்தும் தோஷங்களை, உடலிலிருந்து பிரித்து வெளியேற்றும் சிகிச்சை முறைகளைக் கையாள்வது என்பதை ஆயுர்வேதம் பாராட்டுகிறது. இந்தச் சிகிச்சை முறைகளைத் தாங்கும் சக்தி இல்லாதவருக்கு அடக்கிவிடும் சிகிச்சையை மேற்கொள்ளலாம்.

அதனால் இந்த உபாதையை தோற்றுவிக்கக் காரணமாகிய கப - பித்த தோஷங்களை வளரவிடாமல் பார்த்துக் கொண்டால், அதிக பாதிப்பு ஏதும் ஏற்படாமல் இருக்கலாம். உணவில் அதிக இனிப்பு, புளிப்பு, உப்புச் சுவை சேர்க்காமலும், பகல் வேளையில் படுத்து உறங்காமலிருப்பதும் மிகவும் நல்லது. புளிப்பான கெட்டித் தயிர், மாமிச உணவு வகைகள், எண்ணெய்யில் பொரித்த அப்பளம், போண்டா, வடை, பிஸ்கட் வகையறாக்கள், ஐஸ்கிரீம், முட்டை சேர்த்த கேக், குளிர்பானங்கள், சமோசா, கோப்பி போன்றவற்றைத் தவிர்ப்பது நலம்.

ஒரு வில்வாதி குளிகை எனும் மாத்திரையை துளசி சாறும் இடித்துக் கலந்து முகத்திலுள்ள பரு போன்ற கட்டிகளின் மீது காலை, இரவு உணவுக்கு முன் பற்று போட்டு, அரைமணி நேரம் வரை ஊற வைத்து துடைத்துவிடவும். தோலின் அடிப்புறத்திலுள்ள விஷ சத்து ஏதேனுமிருப்பின், அதைக் கரைத்து வெளியேற்றிவிடும். இதே குளிகை மருந்தை ஒன்றிரண்டு காலை, இரவு உணவுக்குப் பிறகு, வெந்நீருடன் சாப்பிடலாம். சததௌதகிருதம் எனும் களிம்பை கட்டிகளின் மீது பூசலாம். இரவில் படுக்கும் முன் சிறிது நேரம் பூசி வைத்திருந்து, துடைத்துவிட்டுப் பின் படுத்துறங்கலாம்.

### மாரடைப்பு வராதிருக்க...

பச்சைப் பட்டாணியை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உணவுகளுக்கு சூரியகாந்தி எண்ணெய்யைப் பயன்படுத்துவது நலம்!

கொழுப்பு சத்துகள் அதிகம் உள்ள அசைவ உணவினை குறைத்துக் கொள்ள வேண்டும்.

**தேங்காயைத் தவிர்க்க வேண்டும்.**

உருளைக்கிழங்கு, குளிர்பானங்கள் முதலியவற்றை சாப்பிடுவதை முற்றிலும் தவிர்ப்பது நல்லது.

பச்சை வெங்காயத்தை அடிக்கடி சேர்த்துக் கொள்ளலாம்.

மலச்சிக்கல் கூடாது.

காலையில் காற்றோட்டமான இடத்தில் காலாற நடக்க வேண்டும்.

துளசி இலையை மென்று சாப்பிட்டு வருவது பலன் தரும்.

உழுத்தம் பருப்பைக் களியாகக் கிண்டி சாப்பிட்டு வரலாம்.

பூண்டை நசுக்கி வாயில் போட்டுக் கொண்டு வெந்நீரை குடித்து வந்தால் மாரடைப்பு ஏற்படாது. ('ஆரோக்கியமுடன் வாழ...' நூலிலிருந்து)

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வீரவன்ஸவை கைது செய்ய வேண்டும்

எக்ஸத் ஜாதிக பக்ஷய
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தேர்தல் இடம் பெற்றால் அரசாங்கத்திலிருந்து விலகுவதாக கூறிய விமல் வீரவன்ஸ, இப்போதே தனது பதவியிலிருந்து விலக முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாணசபை உறுப்பினர் கே.வேலாயுதம் தெரிவித்தார். அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் விமல் வீரவன்சவையே முதலில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் கே. வேலாயுதம் மேலும் தெரிவித்தார். ராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்றால், தான் அரசாங்கத்திலிருந்து விலகுவதாக விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். எனினும் தற்போதும் அரசாங்கத்திலேயே வீரவன்ஸ இருக்கின்றார், அவரை தான் முதலில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்ய வேண்டும். ஏனெனில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் வீரவன்ஸ போன்றவர்களினால் தான் பிரிவினைவாதம் பேசப்படுகின்றது. ஏனெனில் வடமாகாணம் இலங்கையின் ஒரு பகுதி இல்லை என்பதையே அவர் சுட்டிக்காட்டுகினறார். இது இலங்கையின் ஐக்கியத்திற்கு எதிரான கருத்தாகும்.

யுத்தம் முடிந்துவிட்டது நாட்டில் தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் எல்லோரும் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் வாழ முடியுமென ஜனாதிபதி கூறுகின்றார். இந்நிலையிலேயே அரசாங்கத்தில் பிரிவினைவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## கஞ்சா கடத்தி விற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இரண்டரை கிலோ கஞ்சாவை மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை ஊவா பறணகம பிரதேசத்தில் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை, உஹனை பிரதேசத்திலிருந்து நீண்ட காலமாக வெலிமடை ஊவா பறணகம பிரதேசத்திறகு கஞ்சா கடத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்த சம்மாந்துறை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நேற்று ஊவா பறணகம பிரதேசத்தில் வழிமறித்த பொலிஸார் சந்தேக நபரிடம் இருந்து பொதி செய்யப்பட்ட இரண்டரைக் கிலோ கஞ்சாவை கைப்பற்றியதோடு சந்தேக நபரை கைது செய்த வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பண்டாரவளை பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் விஜயசேகரவின் பணிப்புரைக்கமைய மேலதிக விசாரணைகளை ஊவா பறணகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழு மேற்கொண்டு வருகின்றனர்.

## பரமர் சங்கமம்



'தான் போக வழியைக் காணம் மூஞ்சூறு விளக்குமாத்தையும் காவினதாம்' எண்டால் என்ன? மற்றவர்களின் விடயங்களில் தேவையில்லாமல் மூக்கை நுழைப்பதையும் குறிப்பிடலாமல்லவா?

சில வருடங்களில் பல தடவைகள் தாக்குதலுக்கு உள்ளாகி மக்களின் அனுதாப அலைகளைத் தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கும் குடாநாட்டு நாளிதழ் எப்படித் தன்னை நெருப்புக் குளித்துக் கொள்கிறதெண்ட விடையம் கடந்த 08.05.2013 புதன்கிழமை வெளியிட்ட செய்தி ஒன்றால் பலருக்கும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

முதல்நாள் (07.05.2013) யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிகை ஒப்பனையாளர்களின் பிரச்சினைகள் அனந்தம் அவைகள் மேற்படி நிகழ்வில் பேசப்பட்டன.

அவற்றில் ஒன்றையேனும் மக்களின் கவனத்துக்குக் கொண்டு செல்ல முற்படாத மேற்படி பத்திரிகை 'தெருத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு அடித்த' விதமாக செய்தியைப் பிரசுரித்து பெரிய அசௌகரியத்தை சிகை அலங்கரிப்பாளர் சமூகத்துக்கு ஏற்படுத்தி உள்ளதாக ஒன்றிய தவிசாளர் க.இரத்தினராசா பரமருக்கு கவலையைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கூடி இருந்த ஆயிரக் கணக்கான நிலைய உரிமையாளர், தொழிலாளர்கள் அனைவருக்கும் அந்தப் பத்திரிகையின் பொய் வேடமும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

தினமும் நூற்றுக் கணக்கில் ஒன்று கூடும் சிகை அலங்கரிப்பாளர் நிலையங்களில் மக்கள் சில மணிநேரங்கள் இருந்து சிலாகித்து செல்வதுண்டு. அன்றைய தினம் மேற்படி பத்திரிகை வெளியிட்டிருந்த 'அமைச்சர் 3 மணிநேரம் தாமதம் நிகழ்வை நடத்த காத்திருந்த சிகை ஒப்பனையாளர்கள் வெளியேறினர்' என்னும் அப்பட்டமான பொய்யும் பேசப்பட்டது.

உண்மைக்குப் புறம்பான செய்தியை ஆயிரக் கணக்கான வாடிக்கையாளர்களும் அறிந்து அந்தப் பத்திரிகையின் பொய்முகம் அம்பலத்துக்கு வந்ததால் இப்பொழுது அந்தப் பத்திரிகை தாக்குதலுக்கு உள்ளாவதன் அந்தரங்கமும் அம்பலமாகி இருக்கின்றது.

சிகை ஒப்பனையாளர்களின் முக்கிய பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய வெகுஜன ஊடகம் ஒன்று அவற்றை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு அமைச்சரை சிண்டு முடித்து வைக்கும் தன்னுடைய வழமையான கைங்கரியத்தை செய்திருப்பதாக தவிசாளர் தெரிவித்ததுடன் மேலும் அறியத் தந்துள்ளதாவது,

'ஒரு நாளில் பல தடவை நுகரும் உணவு மற்றும் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் பல நாட்களுக்கு ஒரு தடவை நுகரும் தமது தொழிலால் சிகை ஒப்பனையாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். உழைப்புச் சக்தியை விற்கும் அவர்கள் மலிய விற்பதால் அந்தக் சக்தியை சந்தைகளில் அதிக விலை கொடுத்தும் பெறும் அபாயம் தோன்றியுள்ளது. இவற்றை மக்களுக்கு விளக்க வேண்டிய ஊடகம் என்ன செய்து வருகின்றது? என வினவுகிறார்.

'தானும் வாழாது மற்றவர்களையும் வாழ விடாதெண்டது போல இல்லையே இது... சொல்லுங்க பாப்பம்.

## இரயில் விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

பாதுக்க - அருக்வத்த பாது காப்பற்ற இரயில் கடவையில் நேற்றுக் காலை கொழும்பு நோக்கி வந்த இரயிலில் வான் ஒன்று மோதி இடம் பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

காலை 7 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் தந்தை மற்றும் மகன் ஆகியோரே உயி ரிழந்துள்ளனர். சடலங்கள் பாதுக்க வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

புதிதாக மேற்கொள்ளப்பட்டுள்ள மின் கட்டண உயர்வை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான சட்டத்தரணிகள் அமைப்பு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது.

## பள்ளிவாசல் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான கொலன்னாவையிலுள்ள முஸ்லிம்களின் பள்ளிவ்ாசல் ஒன்றின் மீது நேற்றிரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அதன் அண்மையிலிருந்த வர்த்தக நிலையம் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதல் காரணமாகப் பள்ளிவாசலுக்கும் வர்த்தக நிலையத்துக்கும் சேதமேற்பட்டுள்ளது. இது தொடர்பில் இருவர் வெல்லம்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தியோர் மது போதையில் காணப்பட்டனர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## முரசின் இன்றைய பலன்

(15.05.2013 – புதன்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 01 ஆம் திகதி.
நட்சத்திரம் புனர்பூசம் முன்னிரவு 08.37 வரை. திதி பஞ்சமி.
பிற்பகல் 03.28 வரை. இராகுகாலம் 11.53 - 01.23 வரை.
சுபநேரம் 04.23 - 05.53 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இயற்கையை வியப்பீர்கள். செயல்களில் நேர்த்தி இருக்கும். தொழில், இடையூறு அகன்று நன்னிலை ஏற்படும். சராசரி பணவரவு. கடன் கைக்கு வரும். பொன், பொருள் வாங்கலாம். தொடங்கும் வேலை வெற்றி பெறும். |
| ரிஷபம் | மனதில் குழப்பம் இருக்கும். எவரிடமும் வீண்பேச்சுகள் வேண்டாம். தொழில், வேலைச்சுமை அதிகரிக்கும். குறைந்த பணவரவு. பயன்தராதவற்றை பகட்டுக்காக வாங்க வேண்டாம். அலைச்சலும் சோர்வும். குடும்பம் ஆதரவு. |
| மிதுனம் | உங்களுக்கு இடையூறு செய்தவரை, அறிவீர்கள். சிறிய வேலைக்கும் அதிக முயற்சி தேவைப்படும். அசதியாக உணருவீர்கள். தொழிலில் புதிய உத்தியில் இறங்குவீர்கள். சிக்கனம். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்க. |
| கடகம் | உழைப்புக்குப் பலன் தேடி வரும். தொழில், அபரிமிதமான வளர்ச்சி பெறும். ஆதாய பணவரவு. புத்திரர் விரும்பியது வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். விசேஷ நிகழ்வு ஒன்றுக்குத் திட்டமிடுவீர்கள். அரசால் உதவி. |
| சிம்மம் | அறிவுத் திறமையை நண்பர்கள் பாராட்டுவர். தொழில், கூடுதல் மூலதனம் செய்வீர்கள். பணவரவில் இருந்த இடையூறு விலகும். உடல்நலம் சீராகும். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். |
| கன்னி | பொது விஷயங்களில் ஈடுபாடு. எல்லோரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். தொழிலில் வளர்ச்சிப்பணி திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவில் முன்னேற்றம். குடும்பத்துடன் சுற்றுலாவுக்குத் திட்டமிடுவீர்கள். உறவினர் உங்களை சீராட்டுவர். |
| துலாம் | உறவினருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழிலில் கூடுதல் முயற்சி, உழைப்பு அவசியம். வரவு சுமாரான அளவில். பிள்ளைகளது கல்விச் செலவு வரும். தொழில் நெருக்கடியை நண்பரிடம் பகிர்ந்து ஆறுதல் பெறுவீர்கள். |
| விருச்சிகம் | சொந்த நலனில் அக்கறை காட்டுவீர்கள். உறவினரிடம் வாக்குவாதம் வேண்டாம். தொழில் இலக்கு நிறைவேற, கால அவகாசம் தேவைப்படும். வரவை விட செலவு கூடும். பாதுகாப்பில் கவனம் வேண்டும். பக்தி மனம். |
| தனுசு | பழக்கமில்லாதவரிடம், சொந்த விஷயம் பேச வேண்டாம். தொழில், மாறுபட்ட சூழ்நிலை இருக்கும். வரவுக்கேற்ப புதிய செலவுகளும் ஏற்படும். போக்குவரத்தில் கவனம். குடும்ப ஆதரவு கவலை போக்கும். ஓய்வு உடல் நலம் காக்கும். |
| மகரம் | உண்மைக்கு மரியாதை தருவீர்கள். வெகுநாள் எதிர்பார்ப்பு இனிதாக நிறைவேறும். தொழில், அபிவிருத்தி ஏற்படும். தாராள பணவரவு. குடும்பத்தினர் தேவை தீர்ப்பீர்கள். பழகிப் பிரிந்தவர் சந்திப்பு. வெளியிலிருந்து நல்ல செய்தி. |
| கும்பம் | உங்கள் செயற்திறன் கண்டு, சிலர் பொறாமைப்படுவர். தொழில், இடையூறு சரி செய்வீர்கள். அளவான பணவரவு. உடல்நலத்திற்கு உணவில் கவனம். எதிர்பார்த்த நற்செய்தி வர தாமதமாகும். பிள்ளைகள் புரிந்துணர்வுடன் நடப்பர். |
| மீனம் | எதிர்காலம் குறித்து திட்டமிடுவீர்கள். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், எதிர்பார்த்த வளர்ச்சி வரும். பணவரவில் முன்னேற்றம். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கிடைக்கும். புது முயற்சியில் துணிந்து இறங்கலாம். |

ஒரு பெட்டியினுள் சிவப்பு நிறப்பேனாக்கள் 19 உம், கறுப்பு நிறப்பேனாக்கள் 28 உம், நீல நிறப்பேனாக்கள் 17 உம் இருந்தன.

24) சிவப்பு நிறப்பேனாக்களை விட, கறுப்பு நிறப்பேனாக்கள் எத்தனை கூடுதலாக உள்ளன?
1) 9　　2) 11　　3) 13

25) பெட்டியினுள் இருந்த மொத்தப் பேனாக்கள் எத்தனை?
1) 44　　2) 59　　3) 64

பின்வரும் கூற்றுக்களில் ஒரு கூற்று மாத்திரம் சரியானது. அக்கூற்றைத் தெரிவுசெய்க.

26)
1) 12 மணிநேரக் கடிகாரத்திலுள்ள நிமிட முள், ஒரு நாளில் 12 தடவைகள் சுற்றி வரும்.
2) ஒரு மணித்தியாலத்தில் 60 செக்கன்கள் உண்டு.
3) ஒரு மீற்றரில் 100 சென்ரி மீற்றர்கள் உண்டு.

27)
1) பலா, மா, கொய்யா, அப்பிள் என்பன எமது நாட்டில் வளரும் பயிர்கள்.
2) எமக்கு உப்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.
3) வட்டம், சதுரம், முக்கோணி, செவ்வகம் என்பன தள வடிவங்களாகும்.


மூன்று அடைப்புக்களில் தரப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்தி விடையைக் கண்டுபிடியுங்கள்.

| A | B | C |
|---|---|---|
| - அப்பிள் | - கத்தரி | - உழுந்துவடை |
| - பிட்டு | - மாம்பழம் | - பூக்கோவா |
| - கோவா | - முள்ளங்கி | - பலாப்பழம் |
| - பாற்சோறு | - இடியப்பம் | - அன்னாசிப்பழம் |

28) இரு உணவு வகைகளைக் கொண்ட அடைப்பு எது?
1) A　　2) B　　3) C

29) இரு பழ வகைகளைக் கொண்ட அமைப்பு எது?
1) A　　2) B　　3) C

30) உருவிலுள்ள பொருட்களுடன் தொடர்புடைய செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்யுங்கள்.



1) வெட்டுதல், வரைதல், எழுதுதல்.
2) எழுதுதல், வெட்டுதல், அணிதல்.
3) வெட்டுதல், எழுதுதல், அணிதல்

## விடைகள்

(1) 2　(2) 3　(3) 2　(4) 2　(5) 2
(6) 1　(7) 2　(8) 3　(9) 2　(10) 1

- முதற் படி ⇨ 172/= - 12/= = 160/=
- 2ஆம் படி ⇨ 160 ÷ 2 = 80
- குமாரிடமுள்ள பணம் - 80/=
- விமலிடமுள்ள பணம் - 80 + 12 = 92/=

(11) 2　(12) 3　(13) 3　(14) 3

- 21, 22, 23, 24, 25 வரை எண்களை எழுதி, விடையை கண்டுபிடியுங்கள்.
- 77 இல் 7 = 77 ÷ 7 = 11

- முதற் படி ⇨ கமலாவின் நிறை : அமலாவின் நிறை
- 2ஆம்படி ⇨ 32 ÷ 4 = 8kg (1 மடங்கு)
- 1 மடங்கு ⇨ 8kg
- 3 மடங்கு ⇨ 3 × 8 = 24kg

(15) 1 : ஏனெனில் முதல் அடைப்பிலுள்ள உணவு, வடை, பிட்டு போன்றவற்றை குறிக்கும் பொதுச் சொல் ஆதலால் உணவு என்பது பொருத்தமற்றது

(16) 2 : இதில் கண்ணாடி தவிர்ந்த ஏனையவை தளபாடங்கள்.

(17) 2　(18) 3　(19) 2　(20) 2

(21) 2 : முதல் அடுக்கிலுள்ள கனவுருக்களின் எண்ணிக்கையை, அடுக்கு எண்ணிக்கையால் பெருங்குங்கள்.
- மேல் அடுக்கு × அடுக்கு எண்ணிக்கை
9 × 3 = 27

(22) 3 : நான்கு பக்கங்களைக் கொண்ட தளவடிவங்களே நாற்பக்கல் என அழைக்கப்படும்.

(23) 1 : முதல் உருவில் மட்டுமே இரு சதுரங்கள் உண்டு.

(24) 1　(25) 3　(26) 3　(27) 3
(28) 1　(29) 3　(30) 2



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1 மணி 30 நிமிடம்


# கல்வி முரசு



ஆசிரியர் :- S.D.சந்திரகுமார்

ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகள் இடையே தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

01) முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.




02) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்யுங்கள்.


3) அவன் ---------------- பார்க்கவே வந்தான்.
1) உலவு　　2) உளவு　　3) உழவு

4) அந்த ஊரிலுள்ள ---------------- யில் நீர் வற்றி விட்டது.
1) ஏறி　　2) ஏரி　　3) எரி


5) எனது அருகில் இருப்பவர் எனது அம்மா. ஆனால் நான் அவரின் மகன் அல்ல ---------------- என்றால் நான் யார்?
1) வளர்ப்பு மகன்　　2) மகள்　　3) பேரன்

OHP தாளில் வரையப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றாக மீது ஒன்றை வைக்கும் போது கிடைக்கும் உரு எது?

(6)



(7) (1) (2) (3)




குமாரிடம் ஒரு தொகைப்பணம் உள்ளது. விமலிடம் குமாரை விட ரூபா 12 கூடுதலாக உள்ளது. இருவரிடம் உள்ள மொத்தப்பணம் ரூபா 172.00 ஆகும்.

8) குமாரிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
1) ரூபா 92 2) ரூபா 86 3) ரூபா 80


9) விமலிடம் உள்ள பணத்தொகை எவ்வளவு?
1) ரூபா 86 2) ரூபா 92 3) ரூபா 96

**வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.**

(10)



(11)



12) 21 தொடக்கம் 25 வரை எண்ணும்போது, இலக்கம் இரண்டு எத்தனை தடவைகள் வரும்?
1) 4 2) 5 3) 6

13) 77 இல் எத்தனை ஏழுகள் உள்ளன?
1) 2 2) 6 3) 11

14) கமலாவை விட, அனுலாவின் நிறை 3 மடங்கு அதிகமாகும். இருவரினதும் மொத்த நிறை 32 கிலோகிராம் எனில், அனுலாவின் நிறை எவ்வளவு?
1) 8 kg 2) 16 kg 3) 24 kg



பின்வரும் மூன்று அடைப்புக்களினுள் தரப்படும் சொற்களில் ஒரு சொல் வேறுபட்டது. அச்சொல்லைக் கொண்ட அடைப்பைத் தெரிவு செய்யுங்கள்.

15) 1)
- வடை
- பிட்டு
- இடியப்பம்
- உணவு

2)
- நிலா
- அம்புலி
- சந்திரன்
- திங்கள்

3)
- ஆசிரியர்
- தபாற்காரன்
- தச்சன்
- சிற்பி

16) 1)
- ஆடு
- மாடு
- எருமை
- குதிரை

2)
- கட்டில்
- கதிரை
- மேசை
- கண்ணாடி

3)
- தோழன்
- நண்பன்
- சிநேகிதன்
- பாங்கன்


17) அருகில் தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி நேரம் எத்தனை மணியாக இருக்கலாம் எனக் கண்டுபிடியுங்கள்.




1) மு.ப 9.00 2) ந.ப 12.00 3) பி.ப 4.00

18) லவனின் சட்டைப் பையினுள் 7 நாணயக் குற்றிகள் இருந்தன. அவற்றின் கூட்டுத்தொகை ரூபா 22 எனின், பையினுள் இருந்த நாணயங்கள் எவை?
1) ரூபா 10 - 1, ரூபா 5 - 1, ரூபா 2 - 3, ரூபா 1 - 2
2) ரூபா 10 - 1, ரூபா 5 - 2, ரூபா 2 - 2 ரூபா 1 - 2
3) ரூபா 10 - 0, ரூபா 5 - 3, ரூபா 2 - 3 ரூபா 1 - 1


19) அரைவாசிக்கு நிழற்றப்பட்ட உரு எது?
1) 2) 3)




20) சதுரமுகி வடிவத்தை ஒத்த வடிவம் எது?
1) (2) (3)



21) அருகில் தரப்பட்டுள்ள உருவில் அமைக்கத் தேவையான செங்கற்கள் எத்தனை?




1) 26) 2) 27 3) 30



22) அருகில் தரப்பட்டுள்ள உருவில் எத்தனை நாற்பக்கங்கள் உள்ளன?
1) 4 2) 5 3) 6

23) மூன்று வட்டம், இரண்டு சதுரங்கள், மூன்று முக்கோணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உரு எது?
(1) (2) (3)



# ஏன் விபரீத ஆசை



(மட்ரிட்)

ரியல் மட்ரிட் அணியின் முன்னாள் கால்பந்து வீரரும், தற்போது 86 வயதில் இருப்பவருமான ஆல்பிரடோ டி ஸ்டெபானோ, அட்டகாசமான ஒரு நிகழ்ச்சிக்குத் தயாராகி வருகிறார். அதாவது இந்தத் தாத்தாவுக்கு கல்யாணமாகப் போகிறது. அவரைக் கட்டிக்கப் போகிற பெண்ணுக்கு வயது 36 தான். 86 வயதான ஆல்பிரடோ என்ற கால்பந்து ஜாம்பவானுக்கு இந்த வயதில் போய் காதல் தாக்கியுள்ளது. இவரைக் காதலிக்கும் பெண்ணுக்கோ வயது 36தான்.

ரியல் மட்ரிட் வீரர் ஆல்பிரடோ அந்தக் காலத்தில் ரியல் மட்ரிட் கால்பந்து அணியின் முக்கிய வீரராக இருந்தவர்.

மாரடனோ ஊர்க்காரர் மாரடோனா போன்ற கால்பந்து ஜாம்பவான்களைத் தந்த ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்தவர்தான் ஆல்பிரடோ. 2 முறை பலூன் வாங்கியவர் சிறந்த கால்பந்து வீரர்களுக்கான பலூன் டி. ஓ.ஒர் வின்னர் விருதை 2 முறை வாங்கியுள்ளார் ஆல்பிரடோ.

கோஸ்டாரிகா காதலி ஆல்பிரடோ கரம் பிடிக்கும் பெண்ணின் பெயர் ஜீனா கோன் சாலஸ். இவர் கோஸ்டாரிகாவைச் சேர்ந்தவர். இன்னும் ஒரு மாதத்திற்குள் திருமணம் நடக்கப் போகிறதாம்.

சூப்பர் ஸ்டிரைக்கர் தாத்தா ஆல்பிரடோ அந்தக் காலத்தில் அதிரடியான ஸ்டிரைக்கராக திகழ்ந்தவர். அவரது காலத்தில் அவர் ஒரு முன்னணி ஸ்டிரைக்கராக இருந்துள்ளார். ஜீனாவுடனான காதல் குறித்து ஆல்பிரடோ கூறுகையில்,

நான் ஜீனாவைக் காதலிக்கிறேன். திருமணம் செய்யப் போகிறேன். 86 வயது எனது உடலுக்குத்தான். எனது இதயத்திற்கும், மனசுக்கும் இல்லை என்றார் சிரித்தபடி.

# கிண்ணம் வென்றது மன்செஸ்டர் யுனைட்டட்



(லண்டன்)

இங்லீஸ் பிறிமியர் லீக் கிண்ணத்தை மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் வெற்றிகொண்டுள்ளது. சுவான்ஸி கழகத்திற்கு எதிரான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் மெஞ்ஜஸ்டர் யுனைட்டட் கழகம் வெற்றியீட்டியது.

மென்செஸ்டர் யுனைட்டட் கழகத்தின் முகாமையாளரான சேர் அலக்ஸ் பேர்குசனின் இறுதிப் போட்டியாகவும் இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டிக்கு முன்னதாக 71 வயதான பேர்குசனுக்கு மகத்தான கௌரவம் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோழைத்தனமான முடிவு

உணர்ச்சிவசப்பட்டு தலைமைப் பதவியை துறப்பது என்ற முடிவை எடுத்துவிட்டேன். இது எவ்வளவு முட்டாள்தனமானது, கோழைத்தனமானது என்பதைப் புரிந்துகொண்டுவிட்டேன் என பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக் கப்டன் முஷ்பிகிர் ரகிம் தெரிவித்தார்.பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தான் என்னை கப்டன் பதவியில் அமர்த்தியது. பதவியை ராஜினாமா செய்வதற்கு முன்பாக அவர்களிடம் நான் ஆலோசனை நடத்தி இருக்க வேண்டும்.

அவசரப்பட்டுதவறான முடிவை எடுத்துவிட்டேன். எனது முடிவில் அணி வீரர்களுக்கு பங்கு கிடையாது. உணர்ச்சிவசப்பட்டு விலகல் முடிவை மேற்கொண்டேன். நாடு திரும்பியதும், தலைமைபற்றி விவாதிக்கலாம் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை என்னிடம் கூறியுள்ளது. இது பற்றி இனி அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ப்ரியருக்கு விருது



(லண்டன்)

இங்கிலாந்தின் 2012 - 2013ஆம் ஆண்டிற்கான சிறந்த கிரிக்கெட் வீரராக விக்கெட் காப்பாளர் மட் ப்ரியர் தெரிவாகியுள்ளார்.

நியூசிலாந்துடனான டெஸ்ட் போட்டி சமநிலை பெறுவதற்கு காரணமான சதம் மற்றும் 7 டெஸ்ட் அரைச்சதங்கள் பெற்றுக்கொண்டமைக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணித் தலைவர் குக், கடந்த ஆண்டு இந்த விருதைப் பெற்ற ஜேம்ஸ் அண்டர்சன் ஆகியோர் இந்த விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் 12 விக்கெட்களை வீழ்த்திய இங்கிலாந்து மகளிர் அணியின் பந்துவீச்சாளர் கத்தரின் பேனாட் சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாகத் தெரிவாகியுள்ளார்.

ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை வென்றது மகிழ்ச்சி. இது அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பான முறையில் செயற்பட ஊக்குவிப்பாக அமையும். தொடர்ந்து சிறப்பாக செயற்படுவேன் என விருது வென்ற மட் ப்ரியர் தெரிவித்தார்.

# உடற்தகுதி ஒத்துழைக்கும் வரை வெற்றிப் பயணம் தொடரும்

சாதிக்க வேண்டும் என்ற வெறி என்னுள் அதிகமாகவே உள்ளது. உடற்தகுதி ஒத்துழைக்கும் வரை எனது வெற்றிப் பயணம் தொடரும் என நம்புகின்றேன் என அமெரிக்காவின் ரென்னிஸ் நட்சத்திர வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தெரிவித்தார். மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே செரீனா மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மட்ரிட் ஒப்பனில் கிண்ணம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. உடற்தகுதியை தொடர்ந்து சிறப்பான முறையில் பேணி வருவதினாலேயே சாதிக்க முடிகிறது. இன்னும் எத்தனை ஆண்டுகள் சிறப்பாக ஆட முடியும் என்று இப்போது கூற முடியாது. இருப்பினும் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்




கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் புனே வாரியர்ஸ்
இடம்: ரஞ்சி
மாலை 4.00 மணி

மும்பை இந்தியன்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ்
இடம்: மும்பை
இரவு 8.00 மணி

# கில்கிறிட்ஸ் ஆக்ரோஷம்; அடங்கியது பெங்களூர்

(பெங்களூர்)

அடம் கில்கிறிட்ஸின் ஆட்ரோஷ ஆட்டத்தின் மூலம் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அபாரமான வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 63ஆவது ஆட்டம் நேற்று பெங்களூரில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் களமிறங்கிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி இப்போட்டியை வெல்ல வேண்டும் என்ற முனைப்புடன் நிதானமாக ஆடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய கிறிஸ் கெய்ல், புஜாரா இணை 22 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து முதலாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் ஹோலி கிறிஸ் கெய்லுடன் இணைந்து நிதானமாக ஆடினார். இந்த ஜோடியின் ஆட்டம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி ஆதரவாளர்களை வெறுப்பேற்றும் வகையில் அமைந்திருந்தது. முதல் 12 ஓவர்கள் வரை இந்த ஜோடி மந்தமாக ஆடியது.இதன் பின்னர் இந்த ஜோடி அதிரடியில் கலக்கத் தொடங்கியது. வானவேடிக்கையில் முழங்கிய இந்த ஜோடி அரங்கை கரகோஷ மழையில் அதிரவைத்தது. அங்குமிங்குமாக பறந்த பந்துகள் பவுண்டரிகளாகவும், சிக்ஸர்களாகவும் மாறின. போட்டுக்கொடுத்து பஞ்சாப் பந்துவீச்சாளர்கள் பஞ்சாகி, நூலாகினர். 138 ஓட்டங்களைப் பெற்றவேளை இந்த ஜோடி ஒரு வழியாக பிரிக்கப்பட்டது. தொடர்ந்து பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளியில் சாய்க்கப்பட்டபோதும் ஓட்டங்களையும் வாரிக் குவித்தனர். இறுதியில் பெங்களூர் றோயல் சஞ்சர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 53 பந்துகளை எதிர்கொண்டு ஆறு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 77, ஹோலி 43 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 57, புஜாரா 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அசார் மொகமட் மூன்று, அவன்னா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய மார்ஷ், கில்கிறிட்ஸ் இணை, அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடி 24 ஓட்டங்களைப் பெற்றவேளை சகீர்கானினால் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய அசார் மொகமட், கப்டன் கில்கிறிட்ஸுடன் இணைந்து அதிரடியான ஆட்டத்தை ஆரம்பித்தார். இந்த ஜோடியின் ஆட்டம் பெங்களூர் றோயல் சஞ்சர்ஸ் அணிப் பந்து வீச்சாளர்களை நிலைகுலைய வைத்தது. சூறாவளியாக சுழன்றாடிய இந்த ஜோடி சகல பந்து வீச்சாளர்களையும் சுக்குநூறாக்கி ஓட்டங்களை ஜெட் வேகத்தில் உயர்த்தியது. ஒரு வழியாக இந்த ஜோடி 118 ஓட்டங்களைப் பெற்றவேளை (அசார் மொகமட்) பிரிக்கப்பட்டது. வந்த வேகத்தில் மல்லரின் விக்கெட்டும் சாய்க்கப்பட்டபோதும், மறுமுனையில் தொடர்ந்தும் ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்திய கப்டன் கில்கிறிட்ஸ் வெற்றியை உறுதி செய்யும் வகையில் ஆடினார். இறுதியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 18.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கப்டன் கில்கிறிட்ஸ் 54 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 85, அசார் மொகமட் 41 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முரளிதரன், சகீர்கான் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக கில்கிறிட்ஸ் தெரிவானார். இப்போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் பிளே ஒப் சுற்றுக்கான வாய்ப்பு குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உணவு பிரச்சினைக்கு தீர்வாகும் பூச்சிகள்; ஐ.நா.வின் அருவருப்பான ஆலோசனை



உலகளவில் பசிக் கொடுமையை ஒழிப்பதில் எதிர்காலத்தில் மனிதர்களால் உட்கொள்ளக் கூடிய பூச்சிகள் ஆற்றக் கூடிய பங்களிப்பை ஐ. நா அறிக்கை ஒன்று முன்னிலைப் படுத்தியுள்ளது. ஏற்கனவே 200 கோடி மக்கள் தமது உணவில் வெட்டுக் கிளி, வண்டு, எறும்பு உள்ளிட்ட பூச்சிகளைச் சேர்த்துக் கொள்வதாக ஐ. நா வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு கூறியுள்ளது. பெரிய அளவில் பண்ணைகள் வைத்து தொழில் முறையில் பூச்சிகளை உற்பத்தி செய்வது வருங்காலத்தில் உணவுப் பாதுகாப்புக்கு உத்தரவாதத்தை அளிக்கும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வேகமாக இனப் பெருக்கம் செய்யும் தன்மை கொண்ட பூச்சிகளிடம், புரதச் சத்து அதிகம் காணப்படுகிறது. மீன் மற்றும் கால்நடைகளின் உணவாகவும் இவை பயன்படும் வாய்ப்புள்ளது. அதேநேரம் பூச்சியை சாப்பிடுவதா என்று மேற்கத்திய நாடுகளில் நுகர்வோரிடம் காணப்படும் அருவருப்பு, பூச்சிகள் அதிகம் உணவுக்காக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கலாம் என்றும் ஐ. நா. அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. சீனா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் பூச்சிகள் உணவாக உட்கொள்ளப்படுகின்றன. மேற்கத்திய நாடுகளில் சில ஹொட்டல்களில் இவை அபூர்வப் பொருளாக பரிமாறப்படுகின்றன.

# அதிக செலவான விமானப் பயணம்; இஸ்ரேல் பிரதமருக்கு கண்டனம்



விமானத்தில் படுக்கை வசதிக்காக, அதிகம் செலவிட்ட இஸ்ரேல் பிரதமருக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன், மாஜி பிரதமர் மார்க்கரெட் தாட்சரின் இறுதி சடங்கில் கலந்து கொள்ள இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு லண்டன் சென்றார். அப்போது, இவரது தனி விமானத்தில் படுக்கை வசதி செய்யப்பட்டது. ஐந்து மணி நேர பயணத்துக்கு 70 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

பிரதமர் பதவியில் உள்ள எனக்கு விமானப் பயணத்தில் ஓய்வெடுக்க வசதியாக படுக்கை வசதி அவசியமாகிறது என்று நியாயப்படுத்தியிருந்தார் நேதன்யாகு. ஆனால், பொதுமக்களிடையே இந்த விடயம் கொந்தளிப்பை ஏற்படுத்தியதால், படுக்கை வசதிக்காக எவ்வளவு செலவிடப்பட்டது என்ற தகவல் எனக்கு தெரியாது. இனி என்னுடைய பயணத்தில் படுக்கை வசதி செய்ய தேவையில்லை என்று நேதன்யாகு தற்போது கூறியுள்ளார்.

# அமெரிக்காவில் கலப்பட மருந்து விற்பனை குற்றத்தை ஒப்புக்கொண்ட இந்திய நிறுவனம்



கடந்த 1961ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்ட ரான்பாக்சி என்ற மருந்து தயாரிக்கும் நிறுவனம் 125 நாடுகளுக்கு தனது மருந்துகளை ஏற்றுமதி செய்து வருகிறது.

இந்நிறுவனம் இந்திய ஆலைகளில் தயாரித்த மருந்துகளை அமெரிக்காவில் விற்பனை செய்து வருகிறது. இதில் 2005, 2006ஆம் வருடங்களில் கலப்பட மருந்துகள் விற்பனை செய்ததாக குற்றம் சட்டப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள ரான்பாக்சி கிளை தவறான ஆவணங்களை, அமெரிக்க தர நிர்ணய சோதனையில் வழங்கியதை ஒப்புக்கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 500 மில்லியன் டொலர் (இந்திய மதிப்பில் 50 கோடி ரூபாய்) தொகையை அமெரிக்க அரசு அபராதமாக விதித்தது. அதைச்செலுத்த ரான்பாக்சி நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது.அமெரிக்க உணவு மற்றும் மருந்துக் கழகம், கடந்த 2008ஆம் ஆண்டு இந்நிறுவனத்தின் 30 மருந்துகளை அமெரிக்காவில் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ரான்பாக்சியின் இயக்குனர் தினேஷ் தாகூர் இந்த முறை கேட்டை வெளியே கொண்டு வந்தார். இவருக்கு 48.6 மில்லியன் டொலர் வழங்க அமெரிக்க நீதித்துறை உத்தரவிட்டுள்ளது.

# சீனப் பிரதமர் இந்தியா செல்கிறார்



மூன்று நாள் பயணமாக சீனப் பிரதமர் லீ கெகியாங் வரும் 19ஆம் திகதி இந்தியா வருகிறார். லடாக் எல்லையில் நடந்த சீன ஊடுருவல் சம்பவத்தால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டது. இதனால் சீனப் பிரதமரின் இந்திய வருகை பாதிக்கப்படும் எனக் கருதப்பட்டது. இந்நிலையில் இரு தரப்பும் நடத்திய பேச்சுவார்த்தையால் ஊடுருவற் பிரச்சினைக்குத்தீர்வு காணப்பட்டது. தற்போது சீனப் பிரதமரின் இந்திய வருகையை அந்நாட்டின் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஹோங் லீ அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியது;

பிரதமராக பொறுப்பேற்றவுடன் தான் முதன்முதலில் பயணம் செய்யும் நாடாக இந்தியாவை லீ கெகியாங் தேர்வு செய்தார். இந்தியாவில் மூன்று நாள் பயணம் மேற்கொள்ளும் அவர் புது டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் பிற தலைவர்களுடன் பேச்சு நடத்துகிறார். பின்னர், மும்பை நகருக்கும் செல்கிறார். இந்திய-சீன உறவுகள், நெருங்கிய நட்புறவு தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் லீ கெகியாங் பேச்சு நடாத்துவார். அவரது வருகையால் இரு நாடுகளிடையே உறவு மேலும் வலுவடையும் என்றார்.

உலகச் செய்திகள்

# அமெரிக்க ஜனாதிபதிகளின் சிறப்பு விமானம் ஏலத்தில்




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் பயணம் செய்த சிறப்பு விமானம் இன்று ஏலம் விடப்படுகிறது.

ஜெரால்ட் போர்ட், ஜிம்மி கார்ட்டர், ரொனல்ட் ரீகன், ஜார்ஜ் எஸ்.புஷ், பில் கிளிண்டன், ஜார்ஜ் டபிள்யு.புஷ் ஆகியோர் பயணித்த விமானமே இவ்வாறு ஏலத்திற்கு விடப்படவுள்ளது.

இந்த விமானத்துடன் ஒய்வு பெற்ற அமெரிக்க விண்வெளி ஓடத்தின் சில பாகங்களும் ஏலத்திற்கு வருகிறது. "ஏர் ..போர்ஸ் ஒன் என்றழைக்கப்படும் இந்த சிறப்புமிகு விமானத்தின் ஏலத்திற்கான ஆரம்ப விலை 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரிசோனா மாகாணத்தில் உள்ள போனிக்ஸ் மேசா விமான நிலையத்தில் இந்த விமானம் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது.


# படகு விபத்தில் 200 பேரைக் காணவில்லை



மேற்கு பர்மாவிலிருந்து ரோஹிஞ்சா முஸ்லிம்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த படகொன்று கடலில் மூழ்கியுள்ளது. இந்தவார இறுதியில் குறித்த பிரதேசத்தைத் தாக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் மகாசென் புயலிலிருந்து தப்புவதற்காகவே சுமார் 200 பேரை ஏற்றிய இந்தப் படகு அங்கிருந்து புறப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ரோஹிஞ்சா முஸ்லிம்கள் பெருவாரியாக வாழ்ந்த ராக்கைன் மாநிலத்தின் போக்டோவ் நகரிலிருந்து புறப்பட்ட இந்தப் படகிலிருந்த பெரும் எண்ணிக்கையானோர் காணாமற்போயுள்ளனர்.

கடந்த ஆண்டு ராக்கைன் பிராந்தியத்தில் மூண்ட வன்முறைகளைத் தொடர்ந்து பல லாயிரக் கணக்கான ரோஹிஞ்சா முஸ்லிம்கள் தற்காலிக முகாம்களில் வாழ்ந்துவருகின்றனர். மகாசென் புயலை முன்னிட்டு எச்சரிக்கை விடுத்திருந்த ஐ.நா அந்தப் பிரதேசத்திலிருந்து மக்கள் அவசரமாக வெளியேறப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தது.

பல இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தாழ்நில கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வருவதால் அவர்கள் பெரும் வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ள நேரிடுமென்றும் ஐநா கூறியிருந்தது.புயல் தாக்கத்திலிருந்து தப்பிச்செல்ல முயன்று கடலில் காணாமல்போயுள்ளவர்களைத் தேடும் பணிகள் நடந்து வருவதாக அந்தப் பிராந்தியத்தில் உள்ள ஐநாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அதிகாரி தெரிவித்தார்.



அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா மற்றும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமரூன்.

# பசுபிக் கடலில் நில நடுக்கம்

பசுபிக் கடலில் மேற்குப்பகுதியில் வடக்கு மரியானா தீவுகளில் காலை திடீர் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இங்கு 15 தீவுகள் இருந்தபோதும் 4 தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். அங்குள்ள சாய்பான் நகரில் மட்டும் மொத்த மக்கள் தொகையில் 90 சதவீதம் அதாவது 54 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர்.

நில நடுக்கம் காரணமாக சாய்பான் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் அதிர்வு ஏற்பட்டது. எனவே, வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கியதால் மக்கள் பீதி அடைந்தனர். இதற்கிடையே 7 ரிக்டரில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டது. இருந்தும், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரம் எதுவும் தெரியவில்லை.

# ஊர்காவற்றுறைத் துறைமுகம் புனரமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைத் துறைமுகப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் தமது படகுகளை நிறுத்திவைக்கக்கூடிய விதத்தில் அதனைச் சீர்ப்படுத்தி புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இதன் ஒருகட்டமாக இந்தத் துறைமுகப் பகுதியின் மேற்குப் பக்கமாகக் கரையில் பழுதடைந்த நிலையில் காணப்படும் 32 வரையான இழுவைப் படகுகளை அந்தப் பகுதியில் இருந்து அப்புறப்படுத்த யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதற்கு காரைநகர் கடற்படையினரும் அனுமதியளித்திருப்பதாகத் தெரியவருகின்றது. இந்தப் பகுதியில் காணப்படும் பழுதடைந்த இழுவைப் படகுகள் கடற்படையினரினால் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவை எனவும் தெரியவருகின்றது.

நீண்டகாலம் கரையில் இருந்த இந்தப் படகுகள் பழுதடைந்துபோயுள்ள நிலையில் அந்தத் துறைமுகப் பகுதியைப் பாவிக்க முடியாதபடி அந்தப் படகுகள் காணப்பட்டதனை அடுத்து கடற்படையினர் அவற்றை அப்புறப்படுத்த கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு அனுமதி வழங்கியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதன்படி இந்த 32 படகுகளும் துறைமுகத்திற்கு வெளியே கொண்டுவரப்பட்டு துறைமுகம் துப்புரவு செய்யப்படவுள்ளதுடன கடற்றொழிலாளர்களின் படகுகளை அங்கு கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# 33 ஓட்டங்களால் சுப்பர் கிங்ஸ் வெற்றி

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 64 ஆவது லீக் போட்டி சென்னை சேப், பாக்கம் மைதானத்தில் நேற்று இரவு 8.00 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் - டெல்லி டேர்டெ வில்ஸ் அணிகள் மோதின. இதில் சென்னை சுப்பர்கிங்ஸ் 33 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

சென்னை அணி கப்டன் டோனி துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இறுதியில் கடந்த போட்டியில் விளையாடிய மோரிஸ் நீககப்பட்டு அவருக்குப் பதிலாக அல்பிமோர்கல் சேர்க்கப்பட்டார்.

ஹசி, விஜய் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். விஜய் 23 பந்தில் 31 ஓட்டங்கள் எடுத்து ரன் அவுட் ஆனார். ஹசி 26 ஓட்டங்கள் எடுத்தார். அதன் பின் வந்த அதிரடி வீரர் ரெய்னா 7 ஓட்டம் எடுத்து ஏமாற்றம் அளித்தார்.

4 ஆவது விக்கெட்டுக்கு டோனி - ஜடேஜா ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக விளையாடி வந்தனர். ஜடோ 24 ஓட்டத்தில் யாதவ் பந்தில் கிளீன் போல்டானார். டோனி சிறப்பாக விளையாடி அரை சதத்தை கடநதார். 5 ஆவது விக்கெட்டுக்கு களம் இறங்கிய பிராவோ 12 ஓட்டங்களும், டோனி 58 ஓட்டங்களும் ஆட்டமிழக்காது பெற்றனர். சென்னை அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 168 ஓட்டங்கள் எடுத்தது.

டெல்லி அணி சார்பில் யாதவ் 2 விக்கெட்டும், மெர்வ் 1 விக்கெட்டும் வீழ்த்தினார்கள். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டிசிபி அணி 20 ஓவர் நிறைவில் 135 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது..

# முல்லையிலும் "சிப்தொற"



(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட "சிப்தொற" புலைமைப் பரிசில் வழங்கும் வைபவம் விசுவமடு மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்றது. இதில் முதறகட்டமாக தெரிவு செய்யப்பட் 25 பயனாளிகளுக்கான "சிப்தொற" புலைமைப்பரிசில்களே வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி தவபாலன் மற்றும் ஜனாதிபதியின் மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரின் புதுக்குடியிருப்பு பிரதேச இணைப்பாளர் யொய்ஸ்குமார் ஆகியோரும் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கினார்கள். (125)

# கொட்டடியிலும் இடிமின்னல் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி வைரவர் ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இடி வீழ்ந்ததில் அந்த வீட்டின் சமயலறை மற்றும் மாட்டுக் கொட்டகை என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் கால்நடைகள் இரண்டும் காயங்களுக்குள்ளாகியுள்ளன.

நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் குறித்த பகுதியில் வீழ்ந்த இடி காரணமாக க.கோபிகிருஷ்ணானந்தன் என்பவரது வீட்டின் பகுதியே சேதங்களுக்குள்ளாகியது.

இதனால், இவரது வீட்டு சமயலறை இடிந்து வீழ்ந்ததுடன் இவரது மாட்டுக்கொட்டகையும் வீழ்ந்து சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலும் இந்த மாட்டுக்கொட்டகையில் நின்ற மாடு ஒன்றும், ஆடு ஒன்றும் காயங்களுக்குள்ளாகியதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை நேற்று முன்தினம் அதிகாலை முதல் நண்பகல் வரை நீடித்த "மகாசென்" புயலின் தாக்கம் காரணமாக யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தேசங்கள் மற்றும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை தெரிந்ததே.(பா)

## சீவல் தொழிலாளி...

வருவதாவது. உயரப்புலம் இளவாலைப் பகுதியில் உள்ள தனது வீட்டு முற்றத்தில் இந்த பனை மரத்திலேயே சீவல்தொழிலுக்காக ஏறிய இவர் பனைவட்டில் இருந்தவாறு தொழிலில் ஈடுபட்டிருந்த போது தவறிக் கீழே வீழ்ந்து படுகாயமடைந்ததாகவும் அதன் பின்னர் அவர் சங்கானை வைத்தியசாலைக்குக் கொண்டு செல் லப்பட்ட நிலையில் அங்கு மரணமாகியதாகவும் தெரியவருகின்றது.

இதனை அடுத்து மருத்துவ பரிசோதனைக்காக நேற்று முற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் பின்னர் பிற்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. மேலும் உயிரிழந்தவர் பண்டத்தரிப்பு பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (பா)

## பாக். யுத்த...

துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கிறது.

இக்கப்பல் திருகோணமலைத் துறைமுகத்திற்கு நேற்று வந்தடைந்துள்ளது. இக்கப்பல் இம்மாதம் 17 ஆம் திகதி வரையில் அங்கு தங்கியிருக்கும்.

இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு இடையில் இராஜதந்திர - கலாசார மற்றும் இராணுவ உறவுகளை மேம்படுத்தும் நோக்கிலேயே இக்கப்பல் இலங்கை வந்துள்ளதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். சகல விதமான தாக்குதல்களையும் முறியடிக்கும் திறன்கொண்ட இக கப்பல் 123 மீற்றர் நீளம் கொண்டது. இக்கப்பல் 2010 ஆம் ஆண்டு சீனா சங்ஹாயில் வெளளோட்டம் விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மின்கட்டண...

மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான சட்டவுரைஞர்கள் என்னும் சிவில் உரிமைகள் அமைப்பின் சார்பாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ள சட்டத்தரணி கல்யாணந்த திரணகம தெரிவிக்கையில், உத்தேசிக்கப்பட்டுள்ள மின் கட்டண உயர்வால் ஏழை மக்களும் மத்தியதர வர்க்கமும் நியாயமில்லாத வகையில் பாதிக்கப்படுவார்கள் எனவும் கூறினார்.

## வதைக்கப்படுகின்றனர்...

முஸ்லிம் மக்கள் நாட்டில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு அறிக்கை சமர்ப்பிப்பதாக அசாத் சாலி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார்.

எனினும், அவ்வாறான கடிதங்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என நெசர்கீ சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் ஆராய வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பொதுபலசேனா அமைப்பினால் முஸ்லிம் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் தொடர்பில் அசாத் சாலி முறைப்பாடு செய்திருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

## அரசை எதிர்க்கும்...

உள்ளார். கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பில் நிலவும் மக்கள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள் ளார். மின்சாரக் கட்டண உயர்விற்கு எதிரான மக்களின் எதிர்ப்பைக் கூட சரியான முறையில் எதிர்க்கட்சிகளினால் வெளிப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சிகள் தங்களது சுயநல நோக்கங்களுக்காகவே செயற்படுகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட மக்கள் அமைப்புக்களுடன், இணைந்து எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளதாக தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

## சமாதானத்தின்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்நிகழ்வானது வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லாது வடபகுதி மக்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. கடந்த 35 வருடங்களுக்குப் பின்னர் நானும் இன்றையதினம் புகையிரதத்தில் ஏறி பயணித்துள்ளேன். சமாதானத்தின் பரிசாக எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். ஆனாலும் இவ்வாறான அபிவிருத்தி செயற்திட்டங்களை விரும்பாத சிலர் இதனைக் குறைகூறி வரும் நிலையில், மக்கள் உண்மை நிலையினைத் தெரிந்துகொள்ள வேண்டும். எமது மக்களுக்கான உரிமைகளை அரசுடன் பேசி பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையும் எமக்குள்ளது. அந்த வகையில் எமது பகுதியின் அபிவிருத்தி மேம்பாடு தொடர்பில் அக்கறை செலுத்திவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் மற்றும் இந்திய அரசுக்கும் மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உரையாற்றும் போது, மன்னார் மடுப்பகுதி தற்போது பாரிய அபிவிருத்தி கண்டு வருகின்றது. இந்நாட்டில் சகல இன மக்களும் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழவேண்டும் என்பதுடன், அதற்காக பல்வேறு செயற்திட்டங்களை எமது அரசு முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால எல்லா மக்களும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழ வேண்டும் என்பதே எமது குறிக்கோளாக இருக்கின்றது.

முன்னொரு காலத்தில் மடுக்கோவிலுக்கு செல்வதற்கு பல தடைகள் இருந்த போதிலும், தற்போது அவ்வாறான தடைகள் இல்லாது அனுமதியும் பெறவேண்டிய தேவை இல்லை. அது மட்டுமன்றி கிடைக்கப் பெற்றுள்ள சமாதான சூழலுக்கு ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதே அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இப்புகையிரத சேவைக்காக பல்வேறு உதவித் திட்டங்களை, வழங்கிய இந்திய அரசுக்கும் நாம் நன்றி தெரிவிக்கும் அதேவேளை, இந்த உறவுப்பாலத்தின் ஊடாக வடக்கு, தெற்கு மக்களுக்கு இடையேயான பொருளாதார, கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்துவதற்கும் உதவியாகயிருக்குமென்றும் சுட்டிக்காட்டினார்.

## மனித உரிமைகள்...

காமன்வெல்த் செயலாளர் கமலேஷ் சர்மா குழுவினருடன் அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர், அடுத்த 6 மாத காலத்துக்குள் இந்த செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்பொருட்டு, வட-அயர்லாந்து, கென்யா, உகாண்டா, சியேராலியோன் உள்ளிட்ட பல நாடுகளின் மனித உரிமை நிபுணர்கள் இலங்கை வந்து நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய தேசிய விசாரணை நடைமுறை தொடர்பில் பயிற்சிகளை வழங்குவார்கள் என்றும் டாக்டர் மஹநாம கூறினார்.

இலங்கையில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறைந்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இராணுவத்தினருக்கு மனித உரிமைகள் பற்றி தெளிவூட்டும் வேலைகளும் பல வாரங்களாக நடந்துள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் கூறினார்.

காமன்வெல்த் மாநாடு நடக்கவுள்ள இலங்கையின் மீதே அனைத்து தரப்பினரின் கவனமும் குவிந்துள்ளதாகவும் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் குற்றஞ்சாட்டுவோர் இலங்கைக்கு வந்து நிலைமைகளை நேரில் பார்க்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வெட்டிக் குறையுங்கள் மாகாண அதிகாரங்களை

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை



வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு முன்னர் தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாண சபைக்குரிய ஆறு அதிகாரங்களை நீக்கிவிடுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கமே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்து ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளதாக அந்த இயக்கத்தின் தலைவர் வைத்தியர் குணதாஸ அமரசேகர தெரிவித்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அந்த இயக்கத்தின் தலைவர் வைத்தியர் குணதாஸ அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த கடிதம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபையிலிருக்கின்ற காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிடுவதுடன். அரசியலமைப்பில் 154 ஏ(3), 154 ஏ(2), 154 ஜி(3) மற்றும் மாகாண்சபை பட்டியலில் 4.2 உறுப்புரை ஆகியன திருத்தியமைக்கப்பட்டு மாகாண சபை அதிகாரம் குறைக்கப்படல் வேண்டும்.

இந்த அதிகாரங்களை குறைக்காமல் வடக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்தவேண்டாம் என்றும் எனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளேன்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திவருகின்ற நிலையில் திஸ்ஸ விதாரண, டியூ. குணசேகர மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகிய அமைச்சர்கள் நாட்டுக்கு துரோகமிழைக்கும் நடவடிக்கையினை எடுத்துவருக்கின்றனர். அவர்கள், நாட்டை பிரிப்பதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளேன்.

எமது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல் ஜனாதிபதி வடக்குத் தேர்தலை நடத்துவதற்கு முயன்றால் அது ஈழம் உருவாகுவதற்கான பாதையை வெட்டுவதாகவே அமையும் என்றும் எடுத்துரைத்துள்ளேன்" என்றார்.

# கொட்டடியில் வீதிகள் புனரமைப்பு

யாழ். ஜே/81 கொட்டடி முத்தமிழ் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொட்டடி முதலாம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் மற்றும் 8 ஆம் ஒழுங்கை வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை முன்னாள் உதவி மேயர் றீகன் தெரிவித்தார்.

இவ்வீதிகளை விட மீனாட்சி அம்மன் கோயில் முதலாம், 2 ஆம், 3 ஆம் ஒழுங்கை வீதிகளும், ஜே/85 கிராம அலுவலர் பிரிவிலுள்ள நித்தியவொளி 2 ஆம் ஒழுங்கை, நாவாந்துறை சூரியவொளி முதலாம், 2 ஆம், 3 ஆம் ஒழுங்கை ஆகிய வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளது.

இதைவிட சென்.மேரீஸ் கெனடி வீதி, சென். ஜோசப் வீதி மற்றும் ஜே/61 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கொழும்புத்துறை ஜெற்றி, நெடுங்குளம் முதலாம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் ஒழுங்கை ஆகிய வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், யாழ். மாநகர முதல்வர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வீதிகள் புனரமைக்கப்படவிருப்பதாகத் தெரிவித்தார்.

## ஜனாதிபதி வாழ்த்து

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் நவாஸ் செரிப்பிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். தொலைபேசியூடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது வாழ்த்துக்களை தெரிவித்ததாக பாகிஸ்தான் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## கதிர்காமம் நோக்கி பாதயாத்திரை ஆரம்பம்

(பருத்தித்துறை)

வரலாற்றுப் புகழ் மிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தை நோக்கிய பக்தர்களின் பாதயாத்திரை வடக்கின் பிரசித்திபெற்ற செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து இன்று ஆரம்பமாகிறது.

மட்டக்களப்பு வேல்சாமியின் தலைமையில் புறப்படும் இந்த யாத்திரை கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருமலை, அம்பாறை ஊடாக கதிர்காமத்தை சென்றடையவுள்ளது.

யூலை 8 ஆம் திகதி இப்பாதயாத்திரை அங்கு சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (01,116)

# சிறுமி மீது பலாத்காரம்

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி சேனைப்பிலவு பகுதியில் சிறுமி ஒருவர் மீது பாலியல் பலாத்காரம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்ட 7 வயதுடைய குறிப்பிட்ட சிறுமி மயக்கமடைந்த நிலையில் பற்றைக்காடு ஒன்றுக்குள் இருந்து மீட்கப்பட்டிருக்கிறார்.

இவர் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து மேற்படி பாலியல் பலாத்காரம் புரியப்பட்டமை உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. இவர் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார். நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளைத் தொடர்கின்றனர். (க)

# போராட்டத்தில் குதிக்க தனியார் பஸ் கூட்டமைப்பு தயார்

(கொழும்பு)

அகில இலங்கை தனியார் பஸ் கூட்டமைப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் வேலைநிறுத்த போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

எரிபொருள் விலைக்கேற்ப தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு போக்குவரத்து அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதனையடுத்தே வேலைநிறுத்த போராட்டத்தில் தாம் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அந்தக் கூட்டமைப்பின் செயலாளர் அஞ்சன பிரியந்த தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துடன் தங்களுக்கு எவ்விதமான தொடர்பும் இல்லை என்று தெரிவித்துள்ள அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண பொரளை கெம்பல் மைதானத்தில் நாளை நடைபெறும் ஊர்வலத்தையடுத்தே பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் கலந்துரையாடுவோம் என்றும் அவர் கூறினார்.

2009 தொடக்கம்
சிகரம் தொடு சஞ்சிகை => ஊடகப் பயிற்சி => கல்வி-தொழில் வழிகாட்டி சேவை=>
வெளிநாட்டுக் கல்வி=>தொழில்வாய்ப்புக்கள் => www.sikaram.lk இணைய ஊடகம் என...

3 ஆண்டுகளைக் கடந்து சிகரம் வெற்றிப் பயணம்
இப்போது புதிய இடத்தில், மேலும் பல புதிய சேவைகளுடன்...

UK, Australia, New Zealand, Canada, USA, Malaysia, Thailand
பல்கலைக்கழக அனுமதிகள் & தொழில்வாய்ப்புக்கள்




150க்கு மேற்பட்ட உள்நாட்டு-வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள், 500க்கு மேற்பட்ட கற்கைநெறிகள் தொடர்பான விபரங்களுடன் சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி விபரக்கொத்து 2012-2013




விலை 300/-

எந்தவொரு நாட்டுக்குமான மாணவர் விசா, தொழில் விசா, குடியுரிமை விசா, நிராகரிக்கப்பட்ட விசா மீள்விண்ணப்பம் etc.




சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி (மாத இதழ்)
உள்நாட்டு-வெளிநாட்டு, கல்வி-தொழில் வழிகாட்டி விபரங்களை தினமும் அறிந்துகொள்ள
www.sikaram.lk
facebook.com/edusikaram

O/L சித்தியடையாதவர்களுக்கும், மாதம் 50.000/- வருமானம். University of East London, AETS Australia சான்றிதழ்களுடன் ஹொட்டேல் பயிற்சிநெறி

இலகுவழி ஆங்கிலக் கற்கைநெறி (பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள், பல்கலை மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர், வெளிநாடு செல்ல விரும்புவோர், IELTS தோற்றவிருப்போருக்கு)

விசேட கருத்தரங்கும், வகுப்பு ஆரம்பமும்
25-05-2013 ஞாயிறு, காலை 10மணி

க.பொ.த. உயர்தரமோ, சாதாரணதரமோ,
10ம் வகுப்போ- எவருக்கும் அவரவர் தராதரத்துக்கேற்ற
உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி-தொழில் வாய்ப்புக்கள்

(C/2527)

MEDIA & EDUCATION சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.